உ

# இலக்கிய வினு விடை

❋

வாணி சொக்கலிங்கம்

மீள்பார்வை க. சொக்கலிங்கம் எம். ஏ.

❋

வெளியீடு:

ஜனனி பிரசுரம்,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் பதிப்பு: 20-11-83
பதிப்புரிமை: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
அச்சுப் பதிவு: ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம்.
போன்: 24175 - 24211

*

விலை: ரூபா 5-50

*

விற்பனை உரிமை:

ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. கம்பராமாயணம் — சுந்தரகாண்டம்
## காட்சிப் படலம்

1. பின்வரும் பகுதிகள் (அ) யாரால் (ஆ) யாருக்கு (இ) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டவை என்பதை விளக்குக.

*i.* "மாண்டு போயினன் எருவைகட் கரசன்மன் மற்றோர்
யாண்டை என்னிலை அறிவுறப் பார்களிப் பிறப்பிற்
காண்டலோ அரிது"

*ii.* "ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக் கெம்பிநின் தம்பிநீ
தோழன் மங்கை கொழுந்தி"

*iii.* முனியொடு மிதிலையின் முதல்வன் முந்துநாள்
துனியறு புருவமும் தோளும் நாட்டமும்
இனியன துடித்தன ஈண்டும் ஆண்டென
நனிதுடிக் கின்றன ஆயின் நல்குவாய்

*iv.* உன்னிறம் பசப்பற உயிர் உயிர்ப்புற
இன்னிறத் தேனிசை இனிய நண்பினால்
மின்னிற மருங்குலாய் செவியின் மெல்லெனப்
பொன்னிறத் தும்பிவந் தூதிப் போயதால்

*v.* என்றன ளியம்பிவே றின்னங் கேட்டியால்
இன்றிவ ணிப்பொழு தியைந்த தோர்கனு
வன்றுணைக் கோளரி யிரண்டு மாறிலாக்
குன்றிடை யுழுவையங் குழுக்கொண் டண்டியே

*vi.* மூவகை உலகையு முறையி னீக்கிய
பாவிதன் னுயிர்கொள்வா னிழைத்த பண்பினால்
ஆவதே யரவணைத் துயிலி னீங்கிய
தேவனே அவனிவன் கமலச் செல்வியே!

*vii.* இன்றி றந்தன நாளையி றந்தன
என்றி றந்தருந் தன்மையி தாலெனக்
கொன்றி றந்தபின் கூடுதி யோகுழை
சென்றி றங்கி மறந்தரு செங்கணாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

viii. குன்றுநீ எடுத்த நாள்தன் சேவடிக் கொழுந்தா லுன்னை
வென்றவன் புரங்கள் வேவத் தனிச்சரம் துரந்த மேரு
வென்றுணைக் கணவ ளுற்றற் குரனிலா திற்று வீழ்ந்த
அன்றெழுந் துயர்ந்த ஓசை கேட்டிலை போலுமையா!

2. பின்வரும் பாடல்களைப் படித்து அவற்றின் கீழுள்ள வினுக்களுக்கு விடை தருக:

i. வன்ம ருங்குல்வா ளரக்கியர் நெருக்கவங் கிருந்தாள்
கன்ம ருங்கெழுந் தென்றுமோர் துளிவரக் காணு
நன்ம ருந்துபோல் நலனற வுணங்கிய நங்கை
மென்ம ருங்குல்போல் வேறுள அங்கமும் மெலிந்தாள்.

ii. என்னை நாயக னிளவலை எண்ணலா வினையேன்
சொன்ன வார்த்தைகேட் டறிவில ளெனத்துறந் தானே
முன்னை யூழ்வினை முடிந்ததோ என்றென்று முறையாற்
பன்ன வாய்புலர்ந் துணர்வுதேய்ந் தாருயிர் பதைப்பாள்

iii. பரித்த செல்வம் ஒழியப் படரும்நாள்
அருத்தி வேதியற் கான்குல மீந்தவன்
கருத்தி னுசைக் கரையின்மை கண்டிறை
சிரித்த செய்கை நினைந்தழுஞ் செய்கையாள்

iv. பொன்மனை புக்கவப் பொருவில் போதினில்
என்னைநீ உணர்த்தினை முடிந்த தில்லென
அன்னையே அதன்குறை காணென் றுயிழை
இன்னமும் துயில்கென இருகை கூப்பினுள்;

v. மாசுண்ட மணியினுள் வயங்கு வெங்கதிர்த்
தேசுண்ட திங்களு மென்னத் தேய்ந்துளாள்
காசுண்ட கூந்தலாள் கற்புங் காதலும்
ஏசுண்ட தில்லையா லறத்துக் கீறுண்டோ?

vi. கூசி ஆவி குலைவுறு வாளையும்
ஆசை யாலுயிர் ஆசழி வாளையும்
காசில் கண்ணிணை சான்றெனக் கண்டனன்
ஊச லாட லொழிந்த உளத்தினுன்;

vii. காய்ந்தன சலாகை யன்ன வுரைவந்து கதுவா முன்னம்
தீய்ந்தன செவிக ளுள்ளந் திரிந்தது சிவந்த சோரி
பாய்ந்தன கண்க ளொன்றும் பரிந்தில ளுயிர்க்கும் பெண்மைக்கு
ஏய்ந்தன வல்ல வெய்ய மாற்றங்க ளினைய சொன்னுள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

viii. ஆண்ட வாளரக் கன்னகத் தண்டத்தை அழிப்பான்
மூண்ட காலவெந்தீயென முற்றிய சீற்றம்
நீண்ட காமனீர் நீத்தத்தி னவிவுறு நிலையின்
மீண்டு நின்ருெரு தன்மையா னிவையிவை விளம்பும்

(அ) பாடல்கள் ஒவ்வொன்றிலும் வரும் பாத்திரங்களின் உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ள வகையினை 25 - 30 சொற்களில் விளக்குக.

(ஆ) பாடல் ஒவ்வொன்றிலும் முறையே அமைந்துள்ள.
i. சீதையின் சோகம் ii. சீதையின் மனப்போராட்டம்
iii. இராமனின் உயர் பண்பு iv. சீதையின் பேரவா
v. அனுமான் சீதையிற் கொண்ட மதிப்பு vi. சீதை, இராவணன், அனுமான் மனநிலைகள் vii. சீதையின் தவிப்பு viii. இராவணனின் மனப்போராட்டம் ஆகியவை எவ்வாறு புலப்படுகின்றன?

(இ) பின்வரும் சொற்றொடர்களால் கவிஞர் உணர்த்துவன யாவை?
i. 'நன்மருந்துபோல் நலனற உணங்கிய நங்கை'
ii. 'பன்ன வாய்ப்புலர்ந் துணர்வுதேய்ந் தாருயிர் பதைப்பாள்'
iii. 'சிரித்த செய்கை நிறைந்தழும் செய்கையாள்'
iv. 'இன்னமுந் துயில்கென இருகை கூப்பினுள்'
v. 'கற்புங் காதலும் ஏசுண்ட தில்லை'
vi. 'ஆசையால் உயிர் ஆசழி வான்'
vii. 'பெண்மைக்கு ஏய்ந்தன வல்ல வெய்ய மாற்றங்கள்'
viii. 'மூண்ட காலவெந் தீயென முற்றிய சீற்றம்'

(ஈ) மேற்குறித்த பாடல்களைப் படிக்கும் பொழுது உமது உள்ளத்திலே தோன்றும் உணர்வநுபவங்களைச் சுருக்கமாக விளக்குக.

## விடைகள்

1.

i. (அ) சீதாபிராட்டியாள் (ஆ) தனக்குத் தானே கூறியது (இ) அசோக வனத்திலே அரக்கியராலே சூழப்பட்டு நெருக்குண்டு சிறையிருந்த காலத்தில் இராமனை நினைந்து சீதை பலவாறு வருந்தினுள். "கழுகுகளுக்கு அரசனுன சடாயு இராமலக்குமணரைக் காண முன்னரே இறந்தானே? அவ்வாருயின் அவர்களுக்கு எனது நிலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் எடுத்துரைப்பார்கள்? இனி இராமனை இப்பிறப்பிலே நான் காணல் இயலாத காரியம்'' என்று ஏற்கனவே பிரிவு காரணமாக உண்டான புண்ணிலே மீண்டும் மீண்டும் துயர சிந்தனைகளாகிய நெருப்பு நுழைந்து அவளை வருத்தியது; அத்துயர சிந்தனைகளில் ஒன்றுதான் இப்பாடல்

ii, (அ) சீதாபிராட்டியால்: (ஆ) தனக்குத்தானே கூறியது (இ) அசோக வனத்திலே சிறையிருந்தபோது அவளின் உள்ளத்தில் எழுந்த துயர சிந்தனைகளில் இதுவும் ஒன்று: கங்கா நதியிலே தோணி செலுத்தும் பணிபூண்டவன் குகன்; அவன் ஓர் ஏழை வேடன், எனினும் அவனது அன்பைப் போற்றிய இராமன் ''என் தம்பி உனக்கும் தம்பி. நீ எனக்குத் தோழன். என் மனைவி சீதை உனக்குக் கொழுந்தி'' என்று கூறிய அவனது நட்புச் சிறப்பினைச் சீதை நினைந்து ''பிறரிடத்து இத்தகைய அன்புடையார் தமது அன்பு மனைவியாகிய என்னை நினைந்து தேடி வரமாட்டாரோ?'' என வருந்துகின்றாள்.

iii. (அ) சீதாபிராட்டியால் (ஆ) காவல் அரக்கியருக்குத் தலைமை பூண்ட விபீடணன் மகளாகிய திரிசடைக்கு (இ) திரிசடை மற்றைய அரக்கியர்கள் போலக் கொடியவள் அல்லள்: அவள் சீதையைப் பொறுத்தவரையில் 'தாயினும் இனியவள்.' அரக்கியர் இரவு வந்த பொழுது துயில் என்னும் கள்ளுண்டு மயங்கி இருந்த வேளையிலும் அவள் சீதைக்காக விழித்திருந்து ஆறுதல் கூறுகிறாள். அவளுக்குச் சீதை தன் உடலுறுப்புக்களில் ஏற்பட்ட சில மாற்றங்களை இவ்வாறு சொல்கிறாள், ''விசுவாமித்திரரோடு முதல்வனான இராமன் மிதிலைக்கு வந்தபொழுது எனது இடப்புருவம், இடத்தோள், இடக்கண் ஆகியன துடித்தன. இன்று அவை அவ்வாறே துடிக்கின்றன. இதனை ஆராய்ந்து எனக்கு இனி நிகழவிருப்பதைக் கூறு'' என்பதே இக்கூற்றின் பொருள். பெண்களுக்கு இடப்புருவம் தோள், கண், ஆகியன துடிப்பது வரப்போகும் நன்மையை உணர்த்தும் நற்சகுனமாகும்.

iv (அ) திரிசடையால் (ஆ) சீதாபிராட்டிக்கு (இ) சீதாபிராட்டி தனக்கு இடந்துடித்த காலங்களில் நன்மையும் வலந்துடித்த காலங்களில் தீமையும் வந்தடைந்தன என ஆதாரங்களோடு கூறி 'இப்பொழுது இடந்துடித்தமையால் நன்மை வருமோ, தீமை வருமோ?'' என்று கேட்டபொழுது திரிசடை கூறிய பதில் இது: ''மின்னல் போன்ற இடையினை உடையவளே! உன் உடல் பசுமை நிறம் பெற்றது உன் உயிரும் பிழைத்துக் கொண்டது. இவையெல்லாம் உன் செவிகளிலே பொன்னிற வண்டு ஒன்று வந்து ஊதிச் சென்றமையால் நிகழ்ந்தன'' எனக் கூறிப் ''பொன்னிற வண்டு என்பது இராமன் அனுப்பிய தூதனுகலாம்'' என்று திரிசடை தொடர்ந்து விளக்கம் அளிக்கின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v. (அ) திரிசடையால் (ஆ) சீதாபிராட்டிக்கு
(இ) இராவணனுக்கும் அவனைச்சார்ந்த அரக்கர்களுக்கும் அழிவு ஏற்படப் போகின்றது எனத் தனது கனவுக்கு விளக்கம் கொடுத்த திரிசடை, தொடர்ந்து கூறுவாள். "இன்னமும் கேள். இன்று இப்பொழுது வேறொரு கனவுங் கண்டேன். வலிமை பொருந்திய இரு இளம் ஆண் சிங்கங்கள் புலிக்கூட்டம் ஒன்றோடு இலங்கையின் ஒப்பில்லாத மலையொன்றின் மீது வந்து சேர்ந்தன" இங்கு இரு இளம் ஆண்சிங்கங்கள் என்றது இராமலக்குமணர்களை; புலிக்கூட்டம் என்றது அவர்களின் குரங்குப் படையினை.

vi (அ) அனுமானால் (ஆ) தனக்குத் தானே கூறியது
(இ) சீதையைத்தேடி அலுத்து இறுதியிலே அவளை அசோக வனத்திலாவது காணலாம் என்றும் அவ்வாறு காணாவிடில் இலங்கையைத் திரிகூடமலையிலே தூக்கி அடித்து அழித்துத் தானும் சாவதே முடிவு என்றும் தீர்மானித்து அனுமான் அசோக வனத்துள் நுழைகிறான்; அவளைப் பல இடங்களிலும் தேடி ஈற்றில் அவளிருந்த இடத்துக்கு அண்மையிலுள்ள மரம் ஒன்றிலே அமர்ந்து அவளை அவன் நோக்குகிறான்; அந்த வேளையிலே அவன் மனத்தில் எழுந்த சிந்தனைகளில் இதுவும் ஒன்று. "மூன்று உலகங்களையும் அறநெறியினின்றும் நீங்கிய பெரும்பாவியான இராவணன் தன்னுடைய உயிரைப் போக்கிக் கொள்ளச் செய்த பண்பு இது. இம் முடிவு அவனுக்கு ஏற்படுவது நியாயமானதே. இராமன் (அவன்) ஆதிசேடனாகிய பாம்பணையினின்றும் நீங்கி வந்த விட்டுணுவே, இவள் தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமியே, இதற்கு ஐயமில்லை." இக்கூற்று சீதையின் உயர் கற்பையும் அனுமான் அவள்மீது கொண்ட மதிப்பையும் புலப்படுத்து கின்றது.

vii. (அ) இராவணனால் (ஆ) சீதாபிராட்டிக்கு
(இ) சீதையை நாடி அசோக வனத்திற்கு இராவணன் வருகிறான்; அவனுடைய ஆடை, அணி, அலங்காரங்கள் கண்ணைப் பறிக்கின்றன; தேவமாதர்கள், அரக்கியர்கள், படை பரிவாரங்கள் அவனைச் சூழ்ந்து வருகின்றன. ஆணவத்தின் உருவமான அவன் சீதை முன்பு வந்ததும் தன்னிலை மறந்து அவளுக்குத் தாழ்ந்து பணிந்து போய்விடுகிறான். அந்த நிலையிலே அவன் வாயிலிருந்து வரும் மன்றாட்டமான வேண்டுதல்களில் இப்பாடலும் ஒன்று; "காதளவு நீண்ட கண்ணுடையாளே! இன்றுவரை நாள்கள் பல கழிந்தன. இனியும் நாள்கள் கழியப் போகின்றன; ஆனால் நீ என்மீது இரங்கும் முறை இவ்வாறாக இருக்கின்றது; (நீ என்னில் சற்றும் இரக்கம் காட்டுகின்றாயில்லை) காமநோயினால் நான் இறந்த பின்னரோ நீ என்னைக் கூட இருக்கின்றாய்?' சீதையைச் சேராதவிடத்துத் தான் இறப்பது திண்ணம் என்று தனது பேராசையை இராவணன் இவ்வாறு புலப்படுத்துகின்றான்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

viii. (அ) சீதாபிராட்டியால் (ஆ) இராவணனுக்கு (இ) இராவணன் சீதையைத் தனது கருத்துக்கு இசைய வைக்க அவளை நயந்தும் பயமுறுத்தியும் பலவாறு வேண்டுகின்றான். தனது வீரபராக்கிரமங்களை எடுத்துரைத்து அவளை மயக்க முயல்கின்றான். கற்புக்கனலாகிய சீதைக்கோ அவன் பேச்சுகள் நாராசமாக இருக்கின்றன. அதேவேளை இராவணன் தனக்காக வீணில் அழியப் போகின்றானே என்ற இரக்கமும் மேலிடுகின்றது. இராமனின் பெருமையையும் இராவணனின் சிறுமையையும் அவள் பலபட எடுத்துரைத்து அவன் மனத்தை மாற்ற முயல்கிறாள். "நீ கைலாய மலையை எடுக்க முனைந்தாயல்லவா? அன்று தமது சிவந்த திருவடிக் கொழுந்தால் சிவபெருமான் உன்னை நசித்து வென்றார். அத்தகைய பெருமான் முப்புரங்களையும் அழிக்க எடுத்த மேருமலையாகிய வில் என் கணவனது வலிமைக்கு ஆற்றாது ஒடிந்து வீழ்ந்தது. அது வீழ்ந்த காலத்திலே எழுந்த பேரொலியை நீ கேட்கவில்லைப் போலும்!"

2. (அ)

i. அரக்கியர்கள் பயங்கரமான தோற்றம் கொண்டவர்கள். அவர்களின் இடைகள் வலியவை. வாட்படை அவர்களின் பயங்கரத் தினை அதிகம் ஆக்குகின்றது. சீதையோ மெல்லிய இடையும் அஞ்சிய உள்ளமும் கணவனைப் பிரிந்தமையால் மிகுதியாகிய வேதனையும் உடையவளாய்க் காட்சி தருகின்றாள். அரக்கியர் நெருங்கி இருப்பது பாறைகளை நினைவு படுத்துகின்றது. அந்தப் பாறையினிடையே மழைத்துளியே காணாத சஞ்சீவிச் செடி ஒன்று காய்ந்து கருகி வளரத் துடிப்பது போல (தன் இடைபோல) மெலிந்து விளங்கும் சீதாபிராட்டியை நினைக்க இரக்கம், சோகம் ஆகிய உணர்வுகள் உண்டாகின்றன.

ii. சீதைக்கு வேதனை அதிகரிக்க அதிகரிக்கக் கடந்தகாலச் செயல்கள் நினைவில் வந்து குற்ற உணர்வை உண்டாக்குகின்றன. இலக்குமணனுக்கு வனத்திலே அவள் கூறிய சுடுசொற்களை இராமன் கேட்டுத் தன்னை அறிவில்லாதவள் என்று நினைத்து விலக்கி விட்டானோ என்ற அச்சம் அவளுக்கு ஏற்படுகின்றது. இவ்வாறு தான் பேசியதும் அதனால் இராமனைப் பிரிய நேரிட்டதும் முன்வினைப் பயனே என்றும், அதனைக் கடத்தல் இயலாது என்றும் எண்ணி அவள் வாய்புலர்ந்து உணர்வுகள் தேய்ந்து உருகுவது அவளின் பெருந்தன்மையைப் புலப்படுத்த அவள் மீது அளவு கடந்த மதிப்புணர்வு உண்டாகின்றது.

iii. இராமன் காடு செல்லமுன் பிராமணர்களுக்குப் பசுக்களைத் தானம் வழங்கினான். அவர்களுள் ஒரு பிராமணன் ஆசை மிக்கவனாய் மீண்டும் மீண்டும் பசுத்தானம் வேண்டி இராமன் முன்பு வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைக் கண்டு இராமன் சிறிது ஏளனமாக முறுவலித்தது சீதையின் நினைவில் வருகின்றது. அந்த நினைவு அவளுக்குத் தாழ்வுச் சிக்கலை உண்டாக்குகின்றது: 'பிறனாலே கவரப்பட்ட நான் அவரை மீண்டும் அடைய நினைப்பது பேராசை. இந்தப் பேராசை அவருக்கு நகைப்பையே உண்டாக்கும்' என்ற எண்ணத்தால் சீதை அழுகின்றாள். அவளின் அழுகை சோக உணர்வினை ஏற்படுத்துகின்றது.

iv. திரிசடை தான் கண்ட கனவினைக் கூறி இடையிலே சீதை தன்னை எழுப்பியதால் மிகுதிக் கனவைத் தான் காணவில்லை என்கின்றாள். அந்தக் கனவிலேயே லயித்துப்போன சீதை "தாயே, நீ மீண்டும் நித்திரை கொண்டு மீதிக் கனவையும் காண்" என்பதன் மூலம் அவளின் பேராவல் புலப்படுகின்றது. ஆனால் நினைத்தவுடன் கனவு தோன்றுவதில்லை. 'ஆசை வெட்கம் அறியாது' என்பதோடு ஆசையால் பேதைமையான எண்ணங்களும் உண்டாகலாம் என்பதைச் சீதையின் கூற்று மெய்ப்பிக்கின்றது. சோகத்தினிடையே தோன்றும் நகையுணர்ச்சி இது.

v. "அழுக்குப் படிந்த மாணிக்கம் போலவும் சூரியனின் ஒளியிலே தனது ஒளியை இழந்த சந்திரனைப் போலவும் சீதையின் உடல் மாசு படிந்து விளங்குகின்றது. ஆனால் அவளின் கற்பும் காதலும் கறைப் படவில்லை. தருமத்திற்கு என்னுவது முடிவு ஏற்படுமா?;" என்று அனுமான் சீதைபற்றிச் சிந்தித்துக் கூறுவது உண்மை என்பதற்கு ஐயம் இல்லை. அவனது கூற்றுச் சீதையைத் தெய்வமாகப் போற்றச் செய்கின்றது. அவள்மீது அளவு கடந்த மதிப்புணர்வு உண்டாகின்றது.

vi. இராவணனின் வருகையால் உள்ளம் கூசிச் சீதை உயிர் குலைகின்றாள். காம இச்சையால் இராவணனின் உயிர் ஆற்றல் தேய்கின்றது. இவர்களின் நிலையினைக் கண்ட அனுமானுக்கோ மனம் ஊசலாடித் தவிக்கின்றது. கம்பன் இந்த மூன்று பாத்திரங்களின் இயல்பையும் தத்ரூபமாகச் சித்திரிக்கும் முறைமை அற்புத உணர்வினைத் தோற்றுவிக்கின்றது.

vii. தீயிலிட்டுக் காய்ச்சிய இரும்புத் துண்டுகள் போன்று இராவணனின் சொற்கள் சீதையின் செவிகளில் விழ முன்னமே அவை தீய்ந்து போகின்றன. மன அமைதி குலைகின்றது. விழிகளிலே சிவந்த இரத்தம் பாய்கின்றது. உயிர் பிரிவது கூட அவளுக்குப் பெரிதாய்த் தோன்றவில்லை. இராவணன் மீது இரக்கத்திற்குப் பதில் கோபமே உண்டாக அவள் பெருமூச்சு விட்டுக் கற்புடைப் பெண்களுக்கே உரிய கொடிய சொற்களைக் கூறத் தொடங்குகின்றாள். கற்பின் சிறப்பினையும் அது தீமையைக் கண்டு வெகுளும் இயல்பையும் இப்பாடல் மூலம் உணரல் முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

viii. இராவணனுக்குச் சீதையின் கொடிய சொற்கள் கோபத்தை மிகுவிக்கின்றன. அண்டங்களையே அழிப்பவன் போல மூண்ட சினத்தீயானது ஊழித்தீயாகவே காட்சி தருகின்றது. அவன் உள்ளத்தெழுந்த காமமாகிய கடலோ அதை அணைத்து விடுகின்றது. இந்நிலையில் தவிக்கும் இராவணனை நினைக்க அவன் மீது வெறுப்பும் அருவருப்புணர்வுமே வளர்கின்றன. நீதியைக் கேட்கவும் விரும்பாத அவனது தீய இயல்பு அவன்மீது கோப உணர்வையும் எழுப்புகின்றது.

(ஆ)

i. சீதையின் சோகம்

சீதையின் இடை மிக மெலிவானது. ஊண் உறக்கம் இன்றி எப்பொழுதும் இராமனின் நினைவாகவே கண்ணீர் பெருக்கிக் கசிந்துருகிய அவளின் உடலும் இடையைப் போலவே மெலிந்தது என்றால் அவளின் சோகம் எந்த அளவில் இருக்கும் என்று நினைப்பதே இயலாது. சஞ்சீவிச்செடி பிறர்க்குப் பிணிபோக்கி உயிர் அளிக்கும் மருந்து. ஆனால் இன்றோ அது தன் பிணிக்கே மருந்தறியாது வாடிக் கருகிக் கிடக்கின்றது. அரக்கியரான பாறைகளினூலே நெருக்கப்பட்டு இராமனின் வரவாகிய மழைத் துளியைப் பெறாது சீதையாகிய செடி வருந்தும் வருத்தத்தினைக் கம்பன் இந்தப் பாடலிலே மிக உருக்கமாகச் சித்திரித்துள்ளான்.

ii. சீதையின் மனப்போராட்டம்

இராமன் தன்னை அறிவற்றவள் என்று துறந்தானோ, முன்வினைப் பயன் வந்து மூண்டதுவோ என்று இருவகை ஏமாற்றங்களினிடையே சிக்கி இருதலைக் கொள்ளியுள் எறும்பாகத் தவிக்கிறாள் சீதை. இவற்றில் எந்த முடிவும் அவளாலே தாங்க முடியாதவை. எனவே அவளின் மனப் போராட்டத்திற்கும் முடிவு இல்லை.

iii. இராமனின் உயர் பண்பு:

அந்தணன் பசுக்களைப் பெறும் ஆசையால் இராமனை ஏமாற்ற முயன்றான். எல்லாம் உணர்ந்த இராமனுக்கு அவன் செயல் நகைப்பைத்தான் உண்டாக்கியது. சீதைக்கோ இராமன் எல்லாமாக உள்ளவன். ஆனால் தான் செலுத்தும் அன்புக்கும் மேலானவனாகக் குற்றமே அற்றவனாக விளங்கும் அவனுக்குத் தான் பிடிவாதம் செய்து மானைப் பிடிக்க அவனை அனுப்பியதும், இலக்குமணனைச் சுடுசொல் சொல்லியதும் கோபத்தை விளைவித்திருக்கும். இந்நிலையில் அவன் வருவான் என்று சீதை எதிர்பார்ப்பது மூடத்தனம் அல்லவா? அந்த மூடத்தனமும் அவனுச்குச் சிரிப்பையே விளைவிக்கும் என்று நினைத்துச் சீதை அழுகின்றாள். சீதையின் உள்ளத்தில் இராமனின் உயர் பண்பு எந்த அளவிற்கு இருந்திருக்கும் என்பதை இப்பாடல் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. சீதையின் பேரவா

திரிசடை கூறிய கனவு தன் துன்பத்தை ஒழிக்கும் நற்சகுனம் என்பதைச் சீதை நன்கு உணர்ந்து கொண்டாள்; அவளின் கவலைகள் அந்த எண்ணத்தால் குறைந்து போயின. இந்நிலையில் திரிசடையின் கனவைத் தான் குழப்பிவிட்டது அவளுக்குப் பெரிய ஏமாற்றமாய் இருக்கிறது. அந்த ஏமாற்றத்தைப் போக்கிக் கொள்ள அவள் திரிசடையை மீண்டும் துயின்று கனவு காணவேண்டுகிறாள்; இங்கு அவளின் பேரவா நன்கு புலனாகின்றது;

v. அனுமான் சீதையிற் கொண்ட மதிப்பு:

சீதையின் உடல் அழகு மங்கியது உண்மைதான். சோகம் அவளை முற்றாக விழுங்கிவிட எலும்புந் தோலுமாக அவள் காட்சி தந்ததும் இயல்பே. ஆனால் ஒரு பெண்ணுக்கு எந்த நிலையிலும் கற்பைவிடச் சிறந்தது ஒன்றும் இல்லை. கொடிய மனம் படைத்த அரக்கியர்களின் சூழலிலும், அதிகாரத் திமிர்கொண்ட இராவணனின் கொடுமைகளிலும் அஞ்சி மனம் தளராது உறுதியுடன் கற்பைக் காத்து விளங்கிய சீதை மீது அனுமான் கொண்ட பெருமதிப்பு ''ஏசுண்ட தில்லையால் அறத்திற்கு ஈறுஉண்டோ'' என்ற சொற்றொடரால் புலப்படுத்தப்படுகின்றது;

vi சீதை, இராவணன், அனுமான் மனநிலைகள்:

சீதை இராவணனின் வருகையால் வெறுப்பு, கோபம், அச்சம், துயரம் ஆகியவற்றால் உயிர் குலைவுறுகின்றாள்; இராவணனோ அவளின் நிலையினை உணர்ந்து கொள்ளாது தனது காமமாகிய தீயினாலே எரிக்கப்பட்டு உயிர் அழிகின்றான். அனுமானுக்கோ சீதைமீது பரிவும் இராவணன் மீது கோபமும் ஏற்பட இரண்டிற்கும் இடையே ஊசலாடுகின்றான்; இம்மூவருடைய மன நிலைகளும் இப்பாடலிலே சுருக்கமாகவும் அதே சமயம் மிகத் தெளிவாகவும் புலப்படுகின்றன;

vii. சீதையின் தவிப்பு:

இராவணனைக் கண்ட பொழுதே உயிர் குலைவுறும் அளவு வருத்தத்தினைச் சீதை அடைந்தாள்; அப்படிப்பட்ட அவளுக்கு அவன் வார்த்தைகள் எவ்வாறு இருந்திருக்கும் என்பதைக் காய்ச்சிய இரும்புத் துண்டுகளாகிய அவன் வார்த்தைகளாலே சீதையின் செவிகள் எரிந்தன என்கிறான் கம்பன்; சீதையின் தவிப்பு நிலையில் மன அமைதி குலைவதும் கண்கள் சிவந்து குருதியாகக் கண்ணீர் பாய்வதும் கடின வார்த்தைகளும் சீற்றமும் பிறப்பது இயல்பே. 'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்பது பழமொழி. அந்தப் பழமொழிக்கு எடுத்துக்காட்டாகவே சீதை விளங்குவதை இப்பாடல் மூலம் தெரிந்து கொள்ளலாம்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

viii. இராவணனின் மனப்போராட்டம்:

இராவணன் வணங்கா முடியோன். சிவபெருமானையே தலை தாழ்த்தி வணங்காத செருக்கு உடையவன். அவன் முன்பு கடினமான வார்த்தைகளை எவருமே உரைக்க மாட்டார். அவ்வாறு உரைத்தவர் உயிர்கொண்டு வாழ்வதும் இயலாத காரியம். இவ்வாறிருக்கக் கேவலம் ஒரு பெண் தன்னை இவ்வாறு கடுமையான வார்த்தைகளால் ஏசுவதா என்று நினைத்தபொழுது அவன் ஊழித்தீயாக மாறி விடுகின்றான். ஆனால் சீதையின் பேரழகை அவனால் மறக்கவும் முடியவில்லை. அவளைக் கோபித்துத் தீமை விளைவிக்கவும் கூடவில்லை. காமமாகிய கடல் பெருகி அவன் கோபத் தீயை அணைக்க அவன் இருவேறு உணர்ச்சிகளாலே ஆட்கொள்ளப்பட்டுத் தடுமாறுவதை இப்பாடல் சித்திரிக்கின்றது.

(இ)

i. 'நன் மருந்துபோல் நலனற உணங்கிய நங்கை'

சஞ்சீவிச்செடி எப்பொழுதும் உயிர் காக்கும் ஒரு மருந்துச்செடி. ஆனால் அதன் உயிரே ஊசலாடுமானால் அது எத்தகைய கொடிய துன்பம்! இதனைச் சீதையின் நிலைக்கு உவமானமாகக் காட்டுவது மிகப் பொருத்தமே.

ii 'பன்ன வாய்புலர்ந் துணர்வுதேய்ந் தாருயிர் பதைப்பாள்'

தன் கொழுந்தனாகிய இலக்குமணனுக்குக் கூறிய கடுசொற்கள் ("நீ என்னை அடைவதற்காகவே இத்தனை நாளும் காத்திருந்தாய் போலும். அதனாற்றான் உன் அண்ணனுக்கு ஆபத்தென்று அறிந்தும் அவரைத் தேடிச் செல்கின்றாய் இல்லை") சீதையின் மனச்சாட்சியை நீண்ட காலமாக உறுத்திக்கொண்டிருக்கவேண்டும். அதனை இராமனுக்கு இலக்குமணன் சொல்லியிருந்தால் இராமன் தன்னை எவ்வளவு கேவலமாக நினைத்திருப்பான் என்று நினைத்துப் பார்க்கவே அவளால் இயலாமல் இருக்கின்றது. இதனாலேயே அவள் விதியையும் நொந்து கொள்கிறாள். இந்நினைவு அவள் வாயையே சுட்டுப் புலரவைத்து விடுகின்றது. உணர்வு தேய்ந்து போகிறது; உயிரிலும் பதைப்பு உண்டாகின்றது.

iii 'சிரித்த செய்கை நினைந்தழும் செய்கையாள்'

இராமன் சிரித்ததை நினைத்தால் சீதையின் துயரத்திலும் மகிழ்வு உண்டாகியிருத்தல் வேண்டும். ஆனால் அவளோ அழுகின்றாள். பசுவில் ஆசைகொண்ட பார்ப்பனன் போலத் தானும் தன் தகுதிக்கு மேற்பட்ட இராமன்மீது அளவிலாக் காதல் கொள்வது தவறு என்று சீதை தாழ்வுச் சிக்கலால் வருந்துகிறாள். பார்ப்பனனின் பேராசை போலவே இராமனை அடைய நினைக்கும் தனது பேராசையுமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அவள் நினைத்திருத்தல் கூடும்: அந்த நினைவாலேயே இராமனின் சிரிப்பு அவளுக்கு நெருப்பாகத் தோற்றுகின்றது. எனவே அவள் அழுதது இயல்பே:

*iv.* 'இன்னமுந் துயில்கென இருகை கூப்பினுள்.'

திரிசடையின் கனவு சீதையின் பேராவலைக் கிளப்பிவிடுகின்றது: தொடர் கதையைச் சுவையோடு கேட்டு வரும்பொழுது 'மீதி அடுத்த இதழில்' என்றால் யாருக்குத்தான் ஏமாற்றமாயிராது? அது போலச் சீதைக்கும் ஏமாற்றம் உண்டாகின்றது. அந்த ஏமாற்றத்தைக் கள்ளங் கபடமற்ற சீதையால் வெளிப்படுத்தாது இருக்க முடியவில்லை. அதன் வெளிப்பாடே மேற்சொன்ன அவளின் கூற்று:

*v.* 'கற்புங் காதலும் ஏசுண்டதில்லை'

அனுமானின் இலட்சியம் ஒரு பெண் எந்தச் சூழலிலும் தனது கற்பையும் தன் கணவன் மீது கொண்ட காதலையும் இழத்தல் கூடாது என்பதே. சீதை உடலால் மெலிந்து உருகியது உண்மையே. ஆனால் அவளின் கற்பும் இராமன் மீது கொண்ட காதலும் பழிப்புக்கு இலக்காகவில்லை. சீதையின் உருவம் கண்டு வருந்திய அவனுக்கு அக்கவலையிடையிலும் உண்டாகிய பெருமகிழ்ச்சி அதுவே. இதனையே மேற்குறித்த பாடலின் அடி புலப்படுத்துகின்றது;

*vi.* 'ஆசையால் உயிர் ஆசழிவான்'

இராவணன் பெருவேந்தன். அதிகாரம் படைத்தவன். அளவில்லாத வரமகிமை உடையவன். அவனால் ஆகாதது இல்லை. இருந்த போதிலும் பெண்மீது கொண்ட காம இச்சை அவனது உயிர் ஆற்றலையே அழித்துவிடுகிறது என்றால் 'காமத்தின் இழிவுதான் எத்தகையதாய் இருக்கும்' என்று கம்பன் இந்தச் சொற்றொடர் மூலம் எமக்குப் புலப்படுத்துகின்றான்.

*vii.* 'பெண்மைக்கு ஏய்ந்தனவல்ல வெய்ய மாற்றங்கள்'

சீதை பெண்மைக்கு எடுத்துக்காட்டானவள். அவள் மென்மையாகவே பேசும் இயல்பினள். ஆனால் கற்பென்னும் கலங்காநிலைமையைக் காப்பாற்ற வேண்டிய சமயத்தில் அவள் எரிமலையாக மாறுவது நியாயமானதே: எனவேதான் அவள் கற்புடைப் பெண்களுக்கு நெருக்கடி வேளையில் பொருத்தமாக அமையும் கடினமான சொற்களைப் பேசவேண்டிய அவசியம் உண்டாகின்றது. இதனையே இப்பாடல் அடி புலப்படுத்துகின்றது.

*viii.* 'மூண்ட கால வெந்தீ என முற்றிய சீற்றம்.'

காமபரவசனாய் நின்ற நிலையிலும் நான் என்ற ஆணவம் இராவணனை விட்டு நீங்கவில்லை. அதனாலேயே அவன் சீதையின் கொடிய வார்த்தைகளைக் கேட்டு ஊழித்தீயாகக் கனன்றெழுகின்றான். இதனையே மேற்குறித்த பாடல் அடி சித்திரிக்கின்றது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ)

i. அரக்கியர் சூழ்ந்து நெருங்கியிருக்கச் சிறைவைத்தது காரண மாகச் சீதை மெலிந்தது உண்மை. எனினும் அவளின் உள்ளம் உறுதி யாகவே உள்ளது. இராமன் என்ற மழைத்துளியினை எதிர்பார்த்து அந்த நம்பிக்கையிலேயே சஞ்சீவிச் செடியாக அவள் உயிர் தரித்து வாழ் கிறாள். சிறையினுல் இராவணன் பெறமுடியாததைச் சீதை தன் நிறையினுலே எந்தச் சூழலிலும் காப்பாற்றும் சிறப்பு என் உள்ளத்தில் உருக்கத்தை ஏற்படுத்துகின்றது.

ii. சீதையின் குற்ற உணர்வும் அதனுல் உண்டான உள்ளத் தவிப்பும் கவலையும் நம்பிக்கை இழப்பும் அவள்மீது அநுதாப உணர் வினை ஏற்படுத்துகின்றன.

iii. இராமனுடைய ஒவ்வொரு சிறு செயலையும் கூர்ந்து அவ தானிக்கும் அளவுக்கு அவன் மீது சீதை பேரன்பு கொண்டிருந்தாள். இராமன் முறவல் பூண்ட காட்சி அவளின் உள்ளத்தில் ஏற்படுத்திய போராட்டங்களால் அவள் அழும்பொழுது அந்த அழுகையினூடாக அவளின் பாச அளவினை எண்ணி உள்ளம் நெகிழ்கின்றது.

iv. அதிகமான எதிர்பார்ப்பு எத்தகைய அறிவாளியையும் குழந்தை நிலைக்குக் கொண்டு வந்துவிடும். திரிசடையின் கனவு நிகழ்ச்சியைக் கேட்க 'இனி என்ன இனி என்ன' என்ற எதிர்பார்ப்பு நிலையில் சீதையும் குழந்தைபோல நடக்க முடியாத ஒன்றைத் திரி சடையிடம் எதிர்பார்க்கின்றாள். "இன்னும் துயின்று கனவைத் தொடர்ந்து காண்" என்று அவள் கேட்பதுங் கூட அவளின் சோகத்தையே புலப்படுத்துகின்றது. அதனுலே என் உள்ளத்தில் இரக்க உணர்வு உண்டாகின்றது.

v உடல் அழகு குறைந்தும் உள்ளத்தின் அழகாகிய கற்பும் காதலும் குறையாது விளங்கிய சீதைமீது அனுமானுக்கு உண்டான பத்தி உணர்வு எனக்கும் உண்டாகின்றது.

vi. 'ஆசை வெட்கம் அறியாது'. மூவுலகையும் கட்டியாண்ட இராவணனும் பெண்ணாசையால் சிறியவனானன். இப்பாடல் இரா வணன் மீது வெறுப்பையும் அருவருப்பையும் உண்டாக்குகின்றன.

vii. சீதையின் மெல்லியல்புங்கூட இராவணனின் தகாதவார்த்தை களால் மறைந்துவிடுகின்றது. அவள் சீற்றம் கொண்டு கொடிய வார்த்தைகளை உரைத்தது நியாயமானதே. இப்பாடல் சீதையின் உயர் பண்பினைப் பாராட்டிப் போற்றவும், அவள் மீது மதிப்புணர்வு கொள்ளவும் வைக்கின்றன

viii. நீதியை அறியா மூடனான இராவணன் சீதை இடித்துரைத்துக் கூறிய புத்திமதிகளை அறியாது, உணராது அவன்மீது சீற்றம் கொள் கிறான். இந்தச் செயல் என் உள்ளத்தில் அவன்மீது கோப உணர் வினை ஏற்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. பாரதச் சுருக்கம்

1. பின்வரும் பகுதிகள் (அ) யாரால் (ஆ) யாருக்கு (இ) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டவை என்பதை விளக்குக:

i. "எம்மையெல்லாம் காக்கக் கோல் கைக்கொண்ட நீ இடை நடுவில் விடுத்து வெறுத்துத் துறவு பூண்பதற்குக் கொண்ட கருத்துத் தகாது."

ii. "நீ முன்னே கூறிய மந்திர பலத்தினாலே அறக்கடவுளையும், வாயுபகவானையும், இந்திரனையும் ஸ்மரித்து வரவழைத்து, அவர் தம்மையொத்த புத்திரரைத் தந்தருளுமாறு அவர்பால் வேண்டக் கடவை."

iii. "ஒரு சிங்கத்தை நோக்கி, இச்சிங்கம் மான்வயிற்றிலே பிறந்ததென்று ஒருவன் கூறுவானாயின் அவன் அவ்வளவில் அவ்விஷயத்தை நாட்டினனாக மாட்டான்; அது போலக் கர்ணனுடைய பெருமைகளை நோக்குமிடத்து இராஜவமிசத்திற் பிறந்தவனேயாவனன்றி இழிகுலத்துப் புத்திரனாக மாட்டான்; இவ்வளவில் உங்களுக்குத் திருப்தி இல்லையாயின் அவனை அங்க தேசத்திற்கரசனாக்கி உங்களோடு ஒப்ப உயர்த்தி வைப்பேன்";

iv. "அதோ மேலே இடையறாது சுழன்று கொண்டிருக்கின்ற அம் மச்ச யந்திரத்தை ஐந்து பாணங்களினாற் கீழே வீழ்த்துபவன் யாவனோ அவனே என் தங்கையைப் பாணிக்கிரகணஞ் செய்யும் யோக்கியனாவான்; அம்மச்ச யந்திரத்தை லக்ஷியம் செய்யும்பொழுது கண்களை மேலே வைத்து நோக்காது கீழேயுள்ள தண்ணீரிலே வீழ்கின்ற அதன் நிழலையே நோக்கிப் பாணப்பிரயோகம் செய்தல் வேண்டும்."

v. "இதுகாறும் பாண்டவர்க்கு நீயும் நின் மைந்தரும் செய்ததெல்லாம் வஞ்சகமும் பழியுமேயாமென்றும், பாண்டவரது அரசுரிமை முழுவதையும் அபகரிக்கத் துணை நாடுகின்றனையென்றும், பாண்டவரது பொருளையே உண்டு கொண்டு அவர்களுக்கே தீங்கு விளைவிக்கின்றனையென்றும், உன் க்ஷேமத்தை நீ நா[டு]கின்றனையாயின் அவர்களையும் உன் புத்திரரையுஞ் சமமாய் எண்ணுதல் வேண்டும்" என்றும் கூறினான்;

vi. "அண்ணா. பிரமனால் விதிக்கப்பட்ட விவாக பந்தத்தைச் சிதைக்க யாவரால் ஆகும்? நடந்தேறிய கருமத்தை[ப்]த் துக்கித்தலாற் பயனென்னை! ஆயினும் சுபத்திரைக்கேற்ற நாயகன் அருச்சுனனைத் தவிர வேறு யார்தானுளன்? ஆதலாற் படை தணிவதே ஏற்றது;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vii. 'இப்பூமி முழுதும் ஆள்பவனாகிய உதிஷ்டிரன் தேவி கலங்கி யனுப்பிய வினாவுக்கு இச்சபையிலிருக்கின்ற பெரியோரெல்லீரும் பேசா திருப்பதென்னே? அரசன் கோபிப்பானென நினைந்தோ பேசாதிருக்கின் றீர்கள்? குலத்துப் பிறந்த பெரியோர் தாம் கண்ட முறை கேட்டை எடுத்துக் கண்டியாது விடாரன்றோ? தான் பராதீனப்பட்ட பின்னர் தன் மனைவியை ஒட்டம் வைத்துத் தோற்பதற்கு உரிமையின்மையின் திரௌபதி வினவிய தொக்கும். ஆதலின் திரௌபதி வெல்லப்பட்ட வளாகாள்.'

viii "ஓ! அருச்சுனா! உனது அறிவும் ஆண்மையும் நன்றாயிருக் கின்றன. ஒருவருக்கு வஸ்திரம் எப்படியோ, அப்படியே ஆன்மாவுக் கும். இத்தேகமோ நிலையற்றது. பிறந்தவனன்றே யழியினுமழியும். ஆதலின், இச்சரீரம் நிலையினையுடையதன்று. இச்சரீரத்தை நாமெடுத் தது முன்னர் நாம் செய்த கன்மப் பயனேயாம். இச்சரீரம் நீங்கினால் மற்றொரு சரீரத்தை எடுப்போம்."

ix. "முனிசிரேஷ்டரே! எனக்கு இன்னமும் பிறப்புளதாயின் ஏழேழு பிறப்பிலும் இரப்பவர்க்கில்லையென்றுரையா மனமும் வண் மையுந் தந்தருள வேண்டும்."

x. "வீமன் செய்தது தகும். துரியோதனன் திரௌபதியை மானபங்கஞ் செய்து அவளைத் தன் தொடையிலிருத்த முயன்றது அறிவையன்றோ? அப்பொழுது வீமன் துரியோதனனைத் தொடையைத் தகர்த்துக் கொல்வதாகவிட்ட சபதங்காரணமாகவே அது செய் யப்பட்டது."

2. பாரதச் சுருக்கத்தில் உலவும் பின்வரும் கதாபாத்திரங்களின் குண வியல்புகளை அவற்றிற்கெனக் குறித்துக் காட்டப்படும் கதைப்பகுதி களிலிருந்து ஆதாரங்காட்டி உமது மனப் பதிவினைத் தெளிவுறுத்துக.

i. உதிட்டிரன் :- திரௌபதியைச் சூதாட்டத்திலே தோற்றதி லிருந்து இருஷ்ணனைத் தூது அனுப்பியது வரையுள்ள நிகழ்வுகளை அடிப்படையாகக் கொள்க.

ii. துரியோதனன் :- பாண்டவரைச் சூதாட்டத்திற்கு அழைப்பது தொடக்கம் பாண்டவர் அஞ்ஞாதவாசம் முடிந்து தம்மை இன்னாரென வெளிப்படுத்துவது வரையுள்ள நிகழ்வுகளை ஆதாரமாகக் கொள்க.

iii. திரௌபதி :- திரௌபதி சுயம்வரம் தொடக்கம் துரியோதனன் அவைக்களத்திலே துகிலுரியப்பட்டு அவள் சபதம் செய்வது வரையுள்ள நிகழ்வுகளை ஆதாரமாகக்கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. கர்ணன்:- பாண்டவ கௌரவரின் அரங்கேற்றம் தொடங்கிக் குந்திதேவி மூலம் தன் பிறப்புணர்ந்து அவளிடம் வரம் கேட்கும் வரையுள்ள நிகழ்வுகளை அடிப்படையாகக் கொள்க;

v. கிருஷ்ணபகவான்:- பாண்டவர்க்காய்த் தூது செல்வதிலிருந்து கர்ணனுக்குப் போர்க்களத்தில் வரம் கொடுப்பது வரையுள்ள நிகழ்வுகளின் அடிப்படையில் விளக்குக;

## 2. விடைகள்

1:

i. (அ) நகர மாந்தரால் (ஆ) பாண்டுவிற்கு (இ) காட்டிலே வேட்டையாடச் சென்ற பாண்டு, தொலைவில் கலையும் பிணையும் எனத் தோன்றிய இருஷிமீதும் மனைவி மீதும் அம்பெய்தான்; இருவரும் இறந்து வீழும் நிலையில் இருஷி, ''சிற்றின்பம் விரும்பில் உன்சிரம் ஆயிரம் பிளவாக'' என்று சபித்தார்; அதனாற் கவலையுற்ற பாண்டு நாடு திரும்ப மனமின்றி அச்செய்தியைத் தன் பரிசனங்கள் வாயிலாக நகரமாந்தருக்கு அறிவித்தான். பெற்ற தாயிலும் சிறந்த மன்னனைப் பிரிதல் ஆற்றாத நகர மாந்தர் வனத்துக்கு வந்து அவன் பாதங்களிலே விழுந்து வணங்கி மேற்கூறியவாறு உரைத்தனர்;

ii. (அ) பாண்டுவால் (ஆ) தன் முதல் மனைவியாகிய குந்திக்கு (மூத்தபாரி) (இ) பாண்டு தன் ஆட்சிப் பொறுப்பினைத் தமையனான அந்தகனுக்கு (குருடனுக்கு) அளித்துவிட்டுக் காட்டிலே தன் இரு மனைவியருடனும் வாழ்ந்து வந்தான். அக்காலத்தில் குழந்தைப்பேறு தனக்குக் கிட்டாது என்று அவன் வருந்துகையிலே அவனது முதல் மனைவி (குந்தி), தான் கன்னிகையாயிருந்த காலத்தில் தந்தையின் கட்டளைப்படி ஓர் இருஷிக்குக் குற்றேவல் செய்ததும் அதன் பயனாகத் தேவர்களை அழைத்துப் பிள்ளைப்பேற்றை அடையும் மந்திரத்தை அவர் உபதேசித்ததுமாகிய சம்பவத்தைக் கூறினாள். உலக வாழ்க்கையின் நிலையாமையையும் புத்திரப் பேற்றின் அவசியத்தையும் உணர்ந்த பாண்டு, தன் முதல் மனைவியைப் புத்திரரைப் பெற்று உதவுமாறு வேண்டுகையில் கூறிய கூற்றே இது.

iii. (அ) துரியோதனனால் (ஆ) அரங்கேற்றம் நிகழ்ந்த சபையை நோக்கி (இ) பாண்டவரும் துரியோதனனாதியரும் துரோணாசாரியாரிடம் படைக்கலப் பயிற்சி பெற்றுத் தேறித் தமது திறமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாசனங்கள் கூடிய அவையில் அரங்கேற்றினர். அவ்வரங்கேற்றத்தின் பொழுது அருச்சுனனின் வில்லாண்மை யாவரையும் கவர்ந்தது. சபை ஆரவாரம் செய்தது. அதனைச் சகிக்காது கர்ணனும் எழுந்து தன் திறமைக்கு முன்பு அருச்சுனனின் திறமை அற்பமானது என்று விருதுரை வழங்கினன். அநாதையான அவன் அரசகுமாரனுன அருச்சுனனேடு போரிட முன்வருவதா என்று அவனைக் கிருபாசாரியர் கண்டித்தபோது, துரியோதனன் எழுந்து கூறிய கூற்று இது. கர்ணனைத் தன் உயிர்த் துணைவனுகக் கொள்ளப் பெரிதும் விரும்பியதாலேயே துரியோதனன் இவ்வாறு கூறினன்.

iv. (அ) திருஷ்டத்துய்மனல் (ஆ) திரெளபதியின் சுயம்வரத்திற்கு வந்திருந்த சபாஜனங்களை நோக்கி (இ) வாரணுவதத்திலே அரக்கு மாளிகையில் வைத்துப் புரோசனனல் எரியூட்டப்பட்டு விட்டனர் பாண்டவர் என்ற வதந்தியைத் துருபதன் நம்பவில்லை. அவன் பாண்டவரை வெளிவரச் செய்வதற்காய்த் தன் மகள் திரெளபதிக்குச் சுயம்வரம் என்று எல்லாத் தேய மன்னர்களுக்கும் அறிவித்தான். அரக்கு மாளிகையில் இருந்து தப்பிச் சிறூர் ஒன்றிலே அந்தண வேடத்தில் மறைந்திருந்த பாண்டவருக்கும் இச் செய்தி எட்டியது. அவர்கள் அந்த அந்தணக் கோலத்திலேயே துருபதனின் சபா மண்டபம் வந்தனர். அங்குத் துருபதனின் மகனுன திருஷ்டத்துய்மன் திரெளபதியின் சுயம்வரத்தில் வெற்றி பெற்று அவளுக்கு மணமாலை சூட்டும் நிபந்தனையாகச் சபையினருக்குக் கூறிய கூற்றே இது.

v. (அ) விதுரனல் (ஆ) சபை கூடி இருந்தபொழுது திருதராஷ்டிரனுக்கு (இ) பாண்டவர் வாரணுவதத்திலே அரக்கு மாளிகையில் எரியாது தப்பி நலமாக இருப்பதை விதுரன் தன் தமையனுகிய திருதராஷ்டிர மன்னனுக்கு அறிவித்தான். இதனல் திருதராஷ்டிரன் மகிழவில்லை. பாண்டவர் தப்பியதால் தன் மக்களுக்கு அரசுரிமை கிடைக்காது போகுமே என்று அவன் கலங்கினன். பாண்டவர் துருபதன் மருமக்களாகி அவனுக்கு உறவாகிவிட்டதால் அவர்களைத் துருபதனிடமிருந்து பிரிக்க என்ன செய்யலாம் என்று ஆலோசிக்க அக்குருடன் சபையைக் கூட்டினன். அவனின் தீய எண்ணத்தைக் கண்டித்து வீஷ்மாசாரியர் தமது வாதத்தைத் தொடங்கினர். அவரைத் தொடர்ந்து விதுரன் கூறிய கூற்றே இது.

vi. (அ) கிருஷ்ணபகவானல் (ஆ) பலராமனுக்கு (இ) இந்திரப்பிரஸ்தத்தை இராசதானியாக்கிப் பாண்டவர் ஆட்சி புரிந்த காலத்தில் அருச்சுனன் பல தலங்களையும் தரிசிக்கவும் துவாரகையிலே கிருஷ்ணபகவானின் தங்கையும் அழகியுமாகிய சுபத்திரையை மணக்கவும் விரும்பித் தீர்த்தயாத்திரை சென்றன். ஈற்றில் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவாரகை வந்த பொழுது அவனைக் கிருஷ்ணபகவான் தனிமையிற் சந்தித்தார். தம் தமையனுரான பலராமர் துறவிகளிடத்திலே பத்தியுடையவராதலால் சந்நியாசி வேடம் இட்டுவந்து அவரை மயக்கிப் பின் அரண்மனையில் இடம்பெற்றுச் சுபத்திரையைக் களவில் மணக்கலாம் என்று உபாயம் சொன்னுர். அவ்வுபாயம் நிறைவேறத் தமது மனைவியராகிய உருக்குமணி, சத்தியபாமை மூலம் அருச்சுனன் சந்நியாசிக்கு அன்னம் அளிக்கச் சுபத்திரையை ஒருப்படுத்துவித்தார்: இச் சந்திப்புக்களால் அருச்சுனன், சுபத்திரை காதல் வளர்ந்தது: விழா நாள் ஒன்றில் அருச்சுனன் சுபத்திரையைக் களவில் மணந்து கொண்டு அஸ்தினுபுரம் சென்றுன்: இது பலராமருக்கு அறியவந்த பொழுது, துரியோதனனுக்கு மணந்து கொடுக்க இருந்த தன் தங்கையைக் கைப்பற்றிய அருச்சுனன்மீது அவர் பெருங்கோபம் கொண்டார்; அவனைத் தொடர்ந்து சென்று பற்றிடப் படையுடன் புறப்பட்டார்: அப்பொழுது கிருஷ்ணன் அவரைச் சமாதானம் செய்யக் கூறிய உரைகளே இவை:

vii. (அ) விகர்ணனுல் (ஆ) சபையினருக்கு
(இ) சகுனியின் சூழ்ச்சியாலும் திறமையாலும் உதிஷ்டிரன், அவனேடு சூதாடி நாடு நகர் இழந்தான்; பின்பு தன்னையும் தம்பிமாரையும் பணயம் வைத்துத் தோற்றுன். ஈற்றில் சகுனியின் ஆலோசனையை ஏற்றுத் திரௌபதியையும் ஒட்டம் வைத்துத் தோற்றுப் போனுன். துரியோதனன் வெற்றி வெறியாற் களித்தாடி ஓர் ஏவலனை அனுப்பித் திரௌபதியைச் சபைக்கு அழைத்துவரப் பணித்தான். அவன் ஏவலை ஏற்ற ஏவலன் திரௌபதியை அழைக்கச் சென்றுன்: திரௌபதி, ''உதிஷ்டிரன் தன்னைத் தோற்றபின் தன் மனையாளைத் தோற்றற்கு உரிமை உடையவன் அல்லன்'' என்று கூறிச் சபைக்கு வர மறுத்தாள். அவள் கூறியதை ஏவலன் வந்து சபையிலே கூறச் சபையினர் யாதும் பேசாதிருந்தனர்; அவ்வேளையில் நீதிமானும் துரியோதனனின் கடைசித் தம்பியுமான விகர்ணன் சபையில் எழுந்து கூறிய நியாயங்களே இவை:

viii. (அ) கிருஷ்ணபகவானுல் (ஆ) அருச்சுனனுக்கு
(இ) கௌரவருக்கும் பாண்டவருக்கும் குருக்ஷேத்திரப் போர்க்களத்திலே போர் மூண்டது. இருசாராரின் படைகளும் அங்கு அணிவகுத்து நின்றன. கிருஷ்ணபகவான் தேரைச் செலுத்த அதன் மீது அமர்ந்து யுத்த ஆயத்தனுய் அருச்சுனன் போர்க்களம் வந்தான். அங்கு எதிரணியிலே தனது மூத்தோர், குருமார், இரத்த உறவினர், நண்பர்கள் நிற்பதைக் கண்டு அவன் மனம் கலக்கம் அடைந்தது: துரியோதனனுக்கு எதிராகப் போர் புரிகையில் பெரியோர்களையும் கொல்ல நேருமே என்று அவன் கலங்கினுன்; ''அவர்களுக்கு மாருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லுங் கையிலெடேன்'' என்றும் ''கேசவா,வருக,யாம் மீளுவோம்'' என்றும் உரைத்தான்: அதுகாலை அருச்சுனனது அறியாமை தெளியும் வண்ணம் கிருஷ்ணபகவான் உபதேசித்தவற்றில் ஒரு பகுதியே இக் கூற்றாகும்:

ix. (அ) கர்ணனுல் (ஆ) கிருஷ்ணபகவானுக்கு (இ) போர்க்களத்திலே அருச்சுனனின் அம்புகள் தனது உடலைச் சல்லடை போலத் துளைக்கக் கர்ணன் தேர்த்தட்டின் மீது கிடந்தான்: அதுகாலை சூரியனும் அஸ்தமித்தான். அந்த அளவில் அருச்சுனனைப் போரினை நிறுத்துமாறு கிருஷ்ணபகவான் பணித்து முனிவர் போல வேடம் தரித்துக் கர்ணனை அடைந்தார். அவனிடம் அவர் அது காலவரை செய்த தருமங்களை யாசித்தான். கர்ணன் முழு மனத் தோடு தன் மார்பிலே அம்பு தைத்த வாயினின்றும் சொரிகின்ற செந் நீரோடு தன் புண்ணியத்தைத் தானமாய் வழங்கினான்: அதனை வாங்கிக் கொண்ட முனிவர் ''உன்போலும் ஈகையாளனை நாமிவ் வுலகிற் கண்டிலம். உனக்கு வேண்டும் வரமுளதேற் கேட்குக'' என்ற பொழுது கர்ணன் கூறிய கூற்றே இது.

x. (அ) பலராமருக்கு (ஆ) கிருஷ்ணபகவானுல் (இ) தீர்த்த யாத்திரை முடிந்து வந்த பலராமர், படையினர் யாவரும் புறமுதுகிட்டதால் தடாகம் ஒன்றிலே சென்று ஒளித்திருந்த துரியோதனனை வீமன் சென்று போருக்கழைத்துப் போரிடல் கண்டு அவ்விருவரையும் குருக்ஷேத்திரத்திற்குப் போய்ப் போரிடுமாறு கூறினார்: அவ்வாறே வீமனும் துரியோதனனும் அங்குச் செல்ல மற்றையோர் அவர்களைத் தொடர்ந்து சென்று சூழ்ந்து நின்றனர். போர்க்களத்திலே இருவரும் போரிட்டனர். துரியோதனன் வீமனைச் சாடி அந்தரத்திற் குதித்தெழுந்த வேளையிலே அவன் இடத் தொடையை வீமன் கதாயுதத்தால் அடித்துத் தகர்த்தான். இதனுல் துரியோதனன் தரையிலே வீழ, வீமன் அவன் கிரீடத்தை காலால் உதைத்து அவனை அவமரியாதை செய்தான. யுத்தத்தில் பகைவனின் தொடையில் அடித்துக் கொல்லுதல் முறையன்று. இதனைப் பலராமர் சுட்டிக்காட்டிய பொழுது அவருக்குப் பதிலுரையாகக் கிருஷ்ண பகவான் கூறியதே இக்கூற்று:

## 2.

i. உதிஷ்டிரனின் குணவியல்புகள்:

சகுனி சூதாட அழைத்த பொழுது ''சூதாடல் எனக்கு விருப்ப மாகிய விளையாட்டன்று'' என மறுத்த உதிஷ்டிரன், சூதினுல் விளையக் கூடிய தீமைகளைப் பலவாறு எடுத்துரைத்தான்: இது அவனுடைய நல்லியல்பை நன்கு எடுத்துக் காட்டுவதாகும்: எனினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகுனி "சூதாட்டத்தில் உனக்கு விருப்பமில்லை என்பதை நான் நம்ப மாட்டேன்: என்னை நீ வெல்வது கூடாதென அஞ்சுகின்றனை போலும்" என்ற பொழுது அவனது உரோச உணர்வு தூண்டப் பட்டு விடுகிறது. சூதாடி யாவும் தோற்றான்; ஈற்றில் திரௌபதியை ஒட்டமாக வைத்துத் தோற்றுப் போமளவிற்குச் சூதாட்ட வெறி அவனை ஆட்கொண்டு விடக் காண்கின்றோம். இதிலிருந்து சகுனி, "சூதாட்டத்தில் உனக்கு விருப்பமில்லை என்பதை நான் நம்ப மாட்டேன்" என்று கூறிய கூற்று உண்மை எனவே கொள்ளக் கிடக்கின்றது.

திரௌபதி துச்சாதனனாலே துகில் உரியப்பட்டபொழுது உதிஷ்டிரன் தவிர்ந்த மற்றைய நால்வர் பாண்டவரும் பொங்கி எழுகின்றனர்; "நாம் அடிமைகளாகிவிட்டபின் சத்தியவாக்கைக் கடந்து தருமத்தைக் கைவிடல் தகாது" என அவன் அவர்களுக்குப் புத்திமதி கூறி அமைதி காக்கின்றான். இச்செயல்சாதாரணமானவர்கள் பார்த்து இவனில் கோபமும் வியப்பும் கொள்ளவே இடமளிக்கும். ஆனால் உதிஷ்டிரனைப் பொறுத்தவரையில் எச்சமயத்திலும் தரும வழி ஒழுகுதலே அவன் குறிக்கோள் என்பது புலனாகின்றது. திரௌபதியும் வீமன் முதலான நால்வரும் பயங்கர சபதங்கள் புரிந்து, வனம் ஏகிய வேளையிலும் அவர்களின் முன்னர்ச் சென்ற உதிஷ்டிரன் தன் முகத்தை வஸ்திரத்தால் மூடியபடி செல்கிறான். காரணம் தனது சினம் பொருந்திய கண்கள் பிறர்க்குத் தீமை புரிதல் கூடாது என்ற அச்சமே; இச்செயல் அவனது அளவு கடந்த கருணை உள்ளத்தைக் காட்டுகின்றது.

உதிஷ்டிரனின் தவவலிமை சூரியனிடம் வரம் கிடந்து அக்ஷய பாத்திரம் பெற்றதனாலும் பகைவரையும் மன்னித்து அவர்களைக் காக்கும் இயல்பு சித்திரரதனின் வனத்தை அழித்து அவனாலே சிறையுண்ட துரியோதனனாதியரை அருச்சுனனைக் கொண்டு விடுதலை செய்வித்ததாலும் நன்கு புலனாகின்றன. நச்சுப் பொய்கையிலே யக்ஷன் என்ற காலக் கடவுளின் வினாக்களுக்கு அவன் அளித்த பதில்களாலே அவனது பேரறிவை விளங்கிக்கொள்ளலாம் நச்சுப் பொய்கையில் நீர் குடித்து இறந்துபோன தம்பிமாரில் ஒருவனை எழுப்பித் தருவதாகவும் அவ்வாறு அவன் எழுப்ப விரும்புபவர் யார் என்றும் காலக் கடவுள் வினவுகின்றார். அப்பொழுது "என் தாய்க்கு நான் புத்திரனாயிருக்கிறேன். அதுபோல என் சிற்றன்னைக்குப் புத்திரனை நகுலனை எழுப்பித்தருக" என்று உதிஷ்டிரன் வேண்டுவதை நோக்க அவனின் நீதியைப் போற்றாமல் இருக்க முடியவில்லை.

துரியோதனாதியரால் பல கொடுமைகளுக்கு உள்ளாகிப் பன்னிரண்டாண்டு வனவாசமும் ஓராண்டு அஞ்ஞாத வாசமும் புரிந்து பாண்டவர் திரும்புகின்றனர்; கிருஷ்ணபகவானைத் தூது சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசுரிமை அல்லது ஐந்தூர் வேண்டுவெ. மறுத்தால் போர்செய்து எம் உரிமை பெறுவோம்" என்று உதிஷ்டிரன் அப்பொழுதும் சமாதானத்தையே நாடுகின்றான். இது அவனது பெருந்தன்மையையும் போர் நிகழ்த்தி உயிர்களை அழிக்க விரும்பாத கருணை உள்ளத்தையும் நன்கு எடுத்துக்காட்டுகின்றன. சுருங்கச் சொன்னால் தருமத்தின் முழுமையான வடிவமாகவே உதிஷ்டிரன் காட்சி தருகின்றான் எனலாம்.

ii. துரியோதனனின் குணவியல்புகள்

துரியோதனனின் பொறாமைக்கு அளவில்லை. இக் குணவியல்பு பல சந்தர்ப்பங்களிலே வெளியாகின்றது. எனினும் இந்திரப் பிரஸ்தம் சென்று அங்குப் பாண்டவரின் ஆட்சிச் சிறப்பு, செல்வவளம், அதிகாரமேன்மை ஆகியவற்றை நேரிற் கண்டு திரும்பியபொழுது அவனின் பொறாமையானது உச்சக்கட்டத்தினை அடைகிறது. தன் தந்தை தன்மீது கொண்டிருந்த அளவு கடந்த அன்பை உணர்ந்து அவனைத் தன் வசமாக்குவனவாய் அவைக்களத்திலே அவன் பேசுவன அமைந்துள்ளன. பாண்டவரின் மேன்மையால்தனக்கும் தன்தந்தைக்கும் பெரும் இழிமை உண்டாகிவிட்டதாய் அவன் தந்தையை நம்பவைக்கப் பல பசப்பு வார்த்தைகளை எடுத்துரைத்தான். இனித் தான் வாழ்வதிலும் இறத்தலே நன்று எனச் சொல்லி அதற்குத் தந்தையின் அநுமதியைக் கேட்டபொழுது தந்தை உள்ளம் மூன்னரிலும் கலக்கம் அடைந்தது இயற்கையே. இந்தக் கலக்கத்தை அத்திவாரமாக வைத்துத் தன் சூழ்ச்சி மாளிகையைத் துரியோதனன் வானுயர எழுப்பி அதில் தந்தையைக் குடியேறவும் செய்துவிட்டதில் ஆச்சரியம் இல்லை. திருதராட்டிரனின் அறிவுரைகள் யாவும் அவனைப் பொறுத்தவரையில் செவிடன் காதில் ஊதிய சங்காயின. "மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா" என்ற முதுமொழிக்கு இலக்கியமாகத் துரியோதனன் விளங்கக் காண்கிறோம்.

அடுத்துச் சூதாட்டத்தில் துரியோதனன் சார்பில் சூதாடிச் சகுனி, திரௌபதி உட்பட உதிஷ்டிரனின் எல்லாச் செல்வங்களையும் அபகரித்தபோது அவன் மனம் களிகொண்டு துள்ளுகிறது. அவன் திரௌபதியைத் துச்சாதனன் மூலம் மானபங்கம் செய்விப்பது அவனது பழிவாங்கும் இரக்கமற்ற கொடுமனத்தினை நன்கு எடுத்துக்காட்டுவதாய் உள்ளது. வீமன் முதலானோரது பயங்கர சபதங்களும் திரௌபதியின் சொல் வளர்த்த அச்சமும் கண்டும் துரியோதனன் அஞ்சாது தனது தீச் செயல்களைத் தொடர்வது எதிர்காலத்தை அறியாத மூடன் எனவே அவனைக் கொள்ளவைக்கின்றது.

வனத்திற்குப் பாண்டவரை அனுப்பிய பின்னரும் துரியோதனன் மனம் ஆறி இருக்கவில்லை. சித்திராரதன் என்ற கந்தருவனின் சோலையிலே சென்று தானும் தனது பரிவாரங்களுமாய்க் களியாட்டு நிகழ்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திஞல் அருகில் வாழ்ந்து கொண்டிருக்கும் பாண்டவருக்கு வேதனை உண்டாகும் என்று தப்புக் கணக்குப்போட்டு அவ்வாறே செய்து தனக்கே தவன் தீமையை உண்டாக்கிக் கொள்கிறுன். அந்த வேளையில் உதிஷ்டிரன் அருச்சுனன் மூலமாக அவனையும் அவனைச் சார்ந்தோரையும் விடுதலை செய்த பெருந்தன்மையை உணர்ந்தாவது அவன் திருந்தியிருத்தல் வேண்டும். ஆனுல் எவ்வகையிலும் திருந்த முடியாத மகா கொடியவனே துரியோதனன் என்ற மனப் பதிவு தான் எனக்கு உண்டாகிறது.

நச்சுப் பொய்கை நிகழ்ச்சி, விராட தேசத்தில் ஆநிரை கவரச் செல்லல் முதலாகிய அவனது செயல்கள் யாவும் அவனுக்கே தீமையாக, நட்டமாக முடிகின்றன. இவற்றை எல்லாம் தொகுத்து நோக்கும் பொழுது தருமத்துக்கு எதிராக எந்தச் செயல் புரிந்தாலும் அது இறுதியில் அதனைச் செய்தவர்களுக்கே தீமையை வருவிக்கும் என்ற உண்மையே புலனுகின்றது. துரியோதனனின் குண இயல்புகள் அவன்மீது வெறுப்பு, அருவருப்பு, கோபம் ஆகிய மனப் பதிவுகளையே ஏற்படுத்துகின்றன.

iii திரௌபதியின் குணவியல்புகள் :

மச்சயந்திரத்தைக் குறித்த நிபந்தனைப்படி வீழ்த்திய அருச்சுனனுக்குத் திரௌபதி மாலை சூட்டினுள். இந்தச் சுயம்வரத்தினுல் அருச்சுனனுடைய திறமை எல்லா நாடுகளிலும் பரவியது. அதனோடு பாண்டவருக்குக் கிருஷ்ணபகவானின் நட்பாகிய பெரும்பேறும் கிட்டியது. திரௌபதியை மாலை சூட்டியதோடு விடயம் முடிந்து விடவில்லை. பொருமை கொண்டு போர் செய்ய முற்பட்ட அரசகுமாரர்களுடன் அருச்சுனன் போர் நிகழ்த்தவும் வேண்டியதாயிற்று. திரௌபதியின் வாழ்க்கை அருச்சுனனோடு மட்டுமன்றி அவன் சகோதரருடனும் பிணைந்து அவள் ஐவர்க்கு நாயகியாஞள் புதுமை, மகிமை, போர், புதிய நட்பு ஆகியவற்றின் பின்னணியிலேதான் திரௌபதியின் மணவாழ்க்கை தொடங்கக் காண்கிறேம். இவ்வகையில் அவள் இதிகாச காவிய நாயகிகளுள்ளே தனித்ததோர் இயல்பினள் என்ற மனப்படிவே எனக்கு ஏற்பட்டுள்ளது.

காவிய நாயகிகள் பல வேறு இன்னல்களுக்கும் துன்பத்துக்கும் ஈடு கொடுத்தே தமது பெருமையை நிலைநாட்டிக் கொள்கின்றனர். திரௌபதியும் இதற்கு விலக்கல்லள். அதிலும் கைப்பிடித்த நாயகர் அருகிருக்கவும் மூத்தோரும் அறிஞரும் பெரியோரும் சூழ்ந்திருக்கவும் என்றும் எப்பெண்ணுக்கும் நேராத மாபெரும் அவமானம் ஒன்றுக்கு உள்ளாக்கப்படும் சூழ்நிலை ஏற்படுவது அவளின் வரலாற்றை நோக்கும் எவருக்கும் அநுதாபத்தைத் தராது போகாது. சீதை இராவணனலே கவரப்பட்ட போதிலும் அவனுல் வேறு எவ்விதமான மானபங்கத்துக்கும் உள்ளாக்கப்படவில்லை. கண்ணகி அந்நிய நாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிலே கணவனை இழந்து அல்லற்பட்டு ஆற்ருது அழநேரிட்டாலும் அவளின் மானத்துக்குப் பங்கம் ஏற்படவில்லை. ஆனல் திரௌபதியோ பலர் முன்பு துகிலுரியப் படுதலாகிய மானபங்கத்திற்கு உள்ளாக்கப் பட்டமை உண்மையில் மிகவும் சோகத்தை உள்ளடக்கிய ஒரு நிகழ்வேயாகும்.

எனினும் திரௌபதி தனது கண்ணீருக்கு மத்தியிலும் தன்னம்பிக்கை மிக்கவளாகவே காட்சி தருகின்ருள். உதிஷ்டிரன் தன்னைத் தோற்றபின் தனது மனைவியை ஒட்டம் வைத்துச் சூதாடித் தோற்றமைக்குத் தான் பொறுப்பல்லள் என்று அவள் வாதாடுவதும் சபைக்கு வர மறுப்பதும் அவளின் அறிவாற்றலையும் வாதத்திறனையும் அஞ்சாமையையும் நன்கு காட்டுகின்றன.

இவையாவிலும் பார்க்க அவளின் இறைபத்தி மிகவும் போற்றத்தக்கதாகும். உற்ருர், உறவினர் முதலானோரின் உதவியை இழந்துவிட்ட நிலையில், "......கோவிந்தா, கோவிந்தா என்றரற்றிக் குளிர்ந்து நாவில் ஊறுத அமிழ்தூற உடல் புளகித்து உள்ளமெல்லாம் உருகிஞளே." இந்நிலையில் என் மனத்தில் திரௌபதியின் பத்தி மிகுந்த மதிப்பை அவள்மீது ஏற்படுத்துகிறது.

கிருஷ்ணபகவானின் அருளால் அவளின் துகில் வளர்ந்து துச்சாதனன் முயற்சியை நீடிக்க வைத்து இறுதியில் அவனைத் தோல்வியும் காண வைத்துத் தரையில் வீழ வைத்து விடுகின்றது. 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்பதற்குத் திரௌபதியின் துகில் வளர்ந்தமை சிறந்த எடுத்துக் காட்டாகும்.

'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்பது பழமொழி. துரியோதனன், துச்சாதனன் முதலியோரில் அவள் அடக்க முடியாத சீற்றம் கொண்டது இயல்பே. எனினும் முதியோனும் தன் மாமனுமான திருதராஷ்டிரன் தன் மக்களை மன்னித்தருளுமாறு தன்னை வேண்டியபோது திரௌபதி தன் சீற்றம் அடங்கி அன்புருவாய் மாறியது அவள் பெரியோருக்கு அளிக்கும் மதிப்பையும் குற்றத்தை மன்னிக்கும் பெருந்தன்மையையும் புலப்படுத்துகின்றன. திரௌபதியின் வேண்டுகோள் அவளின் கணவர்களின் அடிமைத்தனத்தை ஒழிக்கவும் உதவிற்று என்பதும் குறிப்பிடத்தக்கது.

**iv. கர்ணன்**

துரியோதனனுதியரும் அருச்சுனன் தவிர்ந்த பாண்டவரும் மக்கள் வெள்ளம் திரண்டிருந்த அரங்கேற்ற மைதானத்தில் தாம் கற்ற போர் வித்தைகளையெல்லாம் செய்து முடித்தனர். அடுத்து அருச்சுனனின் வில்லாண்மை தொடங்கிற்று. அவனது வில்வித்தைச் சிறப்பு அங்கிருந்தார் எல்லாரது உள்ளங்களையும் கவர்ந்தது. அவர்கள் யாவரும் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது மிகுந்த பிரியம் கொண்டு அவனைக் கட்டித் தழுவ ஆர்வம் கொண்டனர். இவ்வாறான மதிப்பை எல்லை மீறிவிடல் கூடாது என்று அந்த அளவில் துரோணர் அருச்சுனனை விளையாடலினின்றும் தவிர்த்தார். அதுகாலை அரங்கமத்தியில் வந்து நின்ற வாலிபன் ஒருவன், ''அருச்சுனனுடைய அற்ப சாமர்த்தியத்தைக் கண்டு இத்துணையாக நீங்கள் மெச்சிக்கொண்டதென்னே'' எனக் கேலிபேசித் தனது சாமர்த்தியங்களை மிகுதியாக எடுத்துரைத்தான். அவனே கர்ணன்; கங்கா நதியில் மிதந்து வந்து பேழையிலே கண்டெடுத்துத் திரிதராஷ்டிரனின் தேர்ப்பாகனால் வளர்க்கப்பட்டவன்; அவன் அருச்சுனனைப் போர்க்கறை கூவி அழைத்தமை கண்டு கிருபாச்சாரியார் ''அரசகுலத்தைச் சேராத அநாதையான நீ அரசகுமாரனான அருச்சுனனை அறைகூவி அழைப்பது அடாது'' என்று தடுத்தார். அதனால் கர்ணன் அவமான முற்று நிற்பது அவன் மீது இரக்கத்தை ஏற்படுத்துவதாகும்.

இந் நிலையில் அவனை நண்பனாக்க விரும்பிய துரியோதனன் அவனைத் தாழ்த்திப் பேசியதை மறுத்துரைத்து அவனுக்கு அங்கதேசத்தின் அரச பதவியை அளித்தமை நியாயமாகவே தோற்றுகின்றது. அந்த நாளிலிருந்து கர்ணன் துரியோதனனின் உயிர் நண்பனாகி அவனுடைய தீமைகளுக்கெல்லாம் துணை நிற்கலானான். எனினும் கள்ளங் கபடமற்ற தன்மையும் வள்ளன்மையும் வாய்த்த அவன் மீது எனக்கு அநுதாபமும் மதிப்புமே ஏற்படுகின்றன; ஏனெனில் அவன் அருச்சுனனளவு வில் வீரமும் நட்புக்காக எதையும் செய்யும் தியாக உள்ளமும் வாய்த்தவனாகவே பவனி வருகின்றான். இருப்பினும் துரியோதனனின் வஞ்சகச் சூழ்ச்சிகளுக்கு அவன் துணை போவது ஓரளவு அவன்மீது வெறுப்பை உண்டாக்காதும் விடவில்லை.

திரௌபதியின் விவாகம், அவளின் துகிலுரிவு, சித்திரரதனோடு போர், விராடநாட்டில் ஆநிரை கவர்தல் முதலாகிய நிகழ்வுகளிலெல்லாம் கர்ணனின் பங்களிப்புகளும் குறிப்பிடத்தக்கனவாகவே உள்ளன. நன்மை பெருமளவும் தீமை சிறிதளவும் கலந்து வாழுவகை தெரியாத அப்பாவியாக அவன் விளங்குவதற்கு அவனது அநாதைத் தனமே காரணம் என்று கொள்ளத் தோன்றுகின்றது.

கர்ணனின் மனத்தில் தன் தாய் யார் என அறியும் ஆவல் மிகுதியாக இருந்து வருகிறது; இந் நிலையில் குந்தி கிருஷ்ணபகவானால் தூண்டப்பட்டுக் கர்ணனிடம் வந்து தானே அவனின் தாய் என்று நிரூபிக்கின்றாள். கர்ணன் சுயநலமுடையவனாய் இருந்திருந்தால் குந்தியுடன் சென்று பாண்டவரோடு சேர்ந்திருக்கலாம். அவ்வாறு சேர்ந்திருந்தால் அவனே பேரரசனாகி யாவரும் மதிக்க அரசு புரிந்திருக்கலாம். அவனது பிறப்புப்பற்றிய கறையும் மறைந்து போயிருக்கும், ஆனால் அவன் அவ்வாறு செய்ய முற்படவில்லை;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அநாதையாய் அவமானமுற்று அரங்கிலே நின்ற பொழுது அரசனுக்கி முடிசூட்டிப் பெரும் திருவும் அளித்த துரியோதனனுக்குத் துரோகம் செய்வது அவனால் நினைக்கவே முடியாத காரியம். இல்லை என்று இரப்போர்க்கு இல்லை என்று உரையா இதயம் படைத்த அக் கொடை வள்ளல். ''அருச்சுனன் மீது நாகக் கணையை ஒரு முறைக்கு மேல் விடவேண்டாம். மற்றைய தம்பிமார் நால்வரையும் கொல்ல வேண்டாம்'' என்று குந்தி கேட்ட வரங்களை வழங்கவும் தவறவில்லை. அதேவேளை, தான் அருச்சுனனால் இறக்க நேரிட்டால் போர்க்களத்தில் தன்னை இன்னான் என வெளிப்படுத்தித் தனக்கு முலையளித்தல் வேண்டும் எனவும், அதுவரை தான் யார் என்று யார்க்கும் வெளிப்படுத்தல் வேண்டாம் எனவும் அவன் குந்தியிடம் வரம் வேண்டுகின்றான்.

தன் நண்பனுக்காக இறுதிவரை போராடியும் பாரதப்போர் தவிர்க்க முடியாதது என்பதை உணர்ந்து அதுவரை தனது பிறவி மர்மத்தை வெளிப்படுத்தல் வேண்டாம் என்று குந்தியை வேண்டியும் கர்ணன் சிறந்த தியாகச் செம்மலாக உயர்ந்து நிற்கிறான். தீமைகளுக்குத் துணை நின்றாலும் தீயவனாய் மாறாமலும் எந்த வேளையிலும் வள்ளன்மை என்ற குறிக்கோளிலிருந்து தவறாமலும் விளங்கிய கர்ணன் என் உள்ளத்தில் மிக உயர்ந்த இடத்தையே வகிக்கின்றான்.

**V. கிருஷ்ணபகவான்**

திரௌபதியின் சுயம்வரத்தின்போது பாண்டவரின் நட்புக்கு உரியவரான கிருஷ்ணபகவான் அவர்களின் வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் ஆபத்துக் காலங்களில் உதவுபவராகவும் விளங்கினார். தெய்வீக இயல்பும் பேராற்றலும் பெருங் கருணையும் மாயத் திறன்களும் பொருந்திய அவர் உதிஷ்டிரனின் வேண்டுகோளினை ஏற்றுத் துரியோதனனிடம் பாண்டவரின் அரசுரிமை அல்லது ஐந்தூர் அல்லது போர் என்ற நிபந்தனைகளை முன்வைத்துத் தூது சென்றார். அவருடன் சாத்தியகி, கிருதவர்மன் ஆகியோரும் சென்றனர்.

அஸ்தினபுரத்தில் திருதராஷ்டிரன் கிருஷ்ணபகவானை வரவேற்று உபசாரமொழிகள் கூறித் தனி மாளிகையிலே தங்க வசதிகள் செய்து கொடுத்த போதும் அவர் அவன் உபசரிப்பை ஏற்கவில்லை. இது அவரின் இராச தந்திரத்தைப் புலப்படுத்துகின்றது. தூதுக் கருமம் இனிது முடிந்த பின்னரன்றித் திருதராஷ்டிரனின் உபசரிப்புகளை ஏற்பது இல்லை என்ற அவரின் முடிவு மிகவும் சாதுரியமானதே. துரோணர் முதலியோரின் அழைப்புக்களையும் திருதராஷ்டிரனின் பெருபசாரங்களையும் மறுத்த கிருஷ்ணபகவான் நல்லோனும் நடுநிலையாளனும் தம்மீது அளவுகடந்த பத்தி உடையோனுமான விதுரனின் வரவேற்பை ஏற்றது, அவரின் கருணை உள்ளத்துக்கு நல்ல எடுத்துக்காட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூது சென்று துரியோதனன் முன்னிலையிலே அஞ்சாமையோடு நீதி நியாயங்களை எடுத்துரைத்த சந்தர்ப்பத்தில் கிருஷ்ணபகவானின் பேரறிவுத் திறன் வெளியாகின்றது. துரியோதனன், பொறிக் கிடங்கிலே தம்மை வீழ்த்திய பொழுது விசுவரூபம் எடுத்து அதனுள்ளிருந்தார் யாவரையும் அழித்து வானுக்கும் மண்ணுக்குமாக வளர்ந்து நின்ற கிருஷ்ணபகவானைக் கையெடுத்து வணங்கல் வேண்டும் என்ற உணர்வு எழுவதைத் தவிர்த்தல் கூடவில்லை. அந்தக் கணத்தில் அவர் நினைத்திருந்தால் துரியோதனனையும் அவனைச் சார்ந்தோரையும் பூண்டோடு அழித்திருக்கலாம். ஆனால் பாண்டவரின் சபதங்களை அவர்கள் நிறைவேற்ற வாய்ப்பளிக்க வேண்டும் என்பதால் அவர் அவ்வாறு செய்யவில்லை. இதனாலும் அவரின் தெய்வப் பண்பு வெளியாகின்றது.

துரியோதனனின் பலத்தைக் குறைக்க அவர் அஸ்தினாபுரத்தில் நிகழ்த்திய மாயச் செயல்களும் தந்திரங்களும் ஈடு இணையற்றவை. விதுரன் வில் முறித்து யாத்திரை செல்லவும், கர்ணன் குந்திக்கு வரங்கள் அளிக்கவும் இந்திரன் கர்ணனிடம் கவசகுண்டலங்களை யாசித்துப் பெறவும் வழி வகுத்தவர் கிருஷ்ணபகவானே. இவை அவரின் அற்புதமான விவேகத்தை எடுத்துக் காட்டுவனவாயுள்ளன. அசுவத்தாமனைத் துரியோதனன் நம்பாது அவனைப் போரில் தளபதி ஆக்குவதில்லை என்று முடிவு செய்யவைத்ததும் கிருஷ்ணபகவானின் மதித்திறத்தின் பயனே.

பாரதப்போர் குருக்ஷேத்திரத்தில் தொடங்கிய காலத்தில் அருச்சுனன் மனங்கலங்கி உறவினரைக் கொன்றொழிக்கத் தயங்கியபோது அவர் அவனுக்குச் செய்த உபதேசங்கள் அவர் கடவுளே என்பதை உணர்த்த, அவர் மீது அளவுகடந்த பத்தி உண்டாகின்றது. போரிலே பாண்டவரின் வீர பராக்கிரமங்களிலும் கிருஷ்ண பகவானின் தந்திரங்களே அவர்களுக்கு வெற்றியை அளித்தன என்பதற்கு ஐயம் இல்லை. துரோணர் வதம், வீஷ்மரின் வீழ்ச்சி முதலாகப் பல தோல்விகள் துரியோதனனுக்கு ஏற்படக் காலாய் இருந்தவர் அவர்தாம் என்பதை மறுத்தல் இயலாது.

கர்ணனின் நாகக் கணையிலிருந்து அருச்சுனனின் தலையைக் காத்தார். கர்ணனின் புண்ணியங்களை முனிவர் வேடத்தில் சென்று பெற்று அவனை வீர சுவர்க்கம் செல்ல வைத்தார். கர்ணனின் புகழை இவ்வாறு உலகில் நிலை நிறுத்தியதோடு மறுமையிலும் அவன் சிறக்க வழிவகுத்த ஸ்ரீ கிருஷ்ணனைப் போன்ற ஒரு பாத்திரத்தை உலகின் எந்த இதிகாசங்களிலும் காணமுடியாது, என்பதே எனது மனப்பதிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. நாட்டார் பாடல்கள்

1. பின்வரும் பகுதிகள் ஒவ்வொன்றும் *(அ)* யாரால் *(ஆ)* யாருக்கு *(இ)* எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டன?

*i.* ஓலைக் கூரையில் ஒதுங்கி நிற்கிறாய்
ஒருமழை வந்தால் ஒழுகச் செய்கிறாய்
வாலைக் காட்டியே வழியில் ஓடுறாய்
மற்ற இடமெல்லாம் சுத்தித் திரியிறாய்.

*ii.* கைவிடுவேன் என்று எண்ணிக் கவலைப்படாதே கண்ணூர்
அல்லாமேல் ஆணை—உன்னை அடையாட்டிக் காட்டுப் பள்ளி

*iii.* நெற்றிக்கு நேரே நிலாக்கிளம்பி வாறதுபோல்
வேலிக்கு மேலால—மச்சான்ர வெள்ளைமுகம் காண்பதெப்போ?

*iv.* அரைத்த மருந்தோ—இங்கே
அம்மிபாழ் போகுதெணை
உரைத்த மருந்தோ—இங்கே
உருக்குலைந்து போகுதெணை

*v.* தூக்குறு மோர்தயிர் நோக்கி ருந்திய
துவரைநகர்க் கிறையாம்
போக்கிலி என்னுடன் தாக்கிட வெஞ்சமர்
புரியப் போறானும்
வீக்கி அவன்றனை ஏக்க முறும்படி
வெஞ்சிறை செய்திடுவேன்
தாக்கி அருஞ்சமர் ஆக்கிட நீயுமுன்
தானையும் ஏகுவீரே.

*vi.* வேண்டாம் என்று சொன்ன மேவும் எந்தன் மகனே
மேவிடும் வயிற்று வலிக்கே என்ன செய்வேன்

*vii.* ஆரைச் சதமென்பேன் என்கணவா
ஐயோநான் என்ன செய்வேன் பூமியிலே
ஆவி நடுங்குதே என் செய்வேன்
அங்க மொடுங்குதே என்கணவா

*viii.* காகம் பருந்துகள் பறந்திட முடியாக் காட்டில் பெரியகாடு
சிங்கம் புலிகளும் திரிகிறதில்லை சேர்ந்த பெரியகாடு
எனக்குச் சகலமும் பயந்து ஒளித்திடும் எந்தன் சொந்தக்காடு
அந்தக் காட்டினில் தைரிய மாக அலைந்து திரிகிறீர்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2: "நாட்டார் பாடல்கள் எழுத்தறிவு அதிகம் இல்லாத பாமர மக்களாற் பாடப்பெறுபவையாயினும் இவை இசைகலந்த இனிய பாடல்களாயும் கேட்பார் செவிக்கும் இதயத்துக்கும் இன்பமளிக்கவல்லனவாயும் உள்ளன" இக்கூற்றை நீர் படித்த நாட்டார் பாடல்களிலிருந்து உதாரணம் காட்டி விளக்குக.

3. நாட்டார் பாடல்களில் காணப்படும் அழகுகளை நீர் அறிந்தவாறு விளக்குக.

4. தாலாட்டுப் பாடல்களிலே ஒரு தாயின் பாசம், நம்பிக்கை, ஆசைக் கனவுகள், பெருமித உணர்வுகள் என்பன வெளிப்படும் வகைகளை விளக்குக.

5. நாட்டார் பாடல்களிலே காணப்படும் சோகச் சுவையையும் நகைச்சுவையையும் போதிய உதாரணந்தந்து விளக்குக.

6. தொழிலாளர்கள் தமது தொழிலின் களைப்புத் தெரியாதிருக்கக் கூட்டாகவும் தனித்தும் பாடும் நாட்டார் பாடல்களிலே காணப்படும் சிறப்புக்களை விபரிக்குக.

## 3. விடைகள்

### 1

i. (அ) புலவனால் (ஆ) எலிக்குக் கூறுவது போலப் பாடியது (இ) வீட்டில் எலியின் தொல்லை பொறுக்கமுடியவில்லை. அந்த வீட்டுக் காரன் நல்ல கவிஞன். நாட்டுப் பாடல்களை உடனுக்குடன் பாட வல்லவன். அவன் எலியைக் கண்டதும் அதன் செயல்களை வரிசைப் படுத்திப் பாடிய பாடல் இது. ஓலைக் கூரைக்குள் ஒளிந்திருந்து கூரையின் ஓலைகளைத் தனது கூரிய பல்லினால் கடித்து ஓட்டையாக்கி விடுகிறதாம் எலி. அதன் செயலால் சிறிய மழை என்றாலும் ஒழுக்குத்தான். அதற்குச் சரியான துணிச்சல், துரத்தினால் வாலைக் காட்டி ஓடுவதும் எப்பொழுதும் சுற்றித்திரிவதும் அதன் தொழில்களாகி விட்டனவாம்.

ii. (அ) காதலனால் (ஆ) காதலிக்கு (இ) காதலனும் காதலியும் தனிமையில் உரையாடுகின்றனர். அவ்வேளையில் காதலியின் தாய் தொலைவில் அழைப்பது கேட்கின்றது. தலைவிக்கு அச்சம் உண்டாகின்றது. அவளைத் தேறுதல் கூறி அனுப்பும் வகையிற் காதலன் கூறிய உறுதி வார்த்தைகளில் இதுவும் ஒன்று. "அல்லாவின் மீது சத்திய வாக்காய் இதனை உரைக்கின்றேன். உன்னை எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிடமாட்டேன். உன்னை அடையாத நிலை ஏற்படுமானால் அது என் மரணத்தில்தான்" என்ற அவனின் கூற்றே இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. (அ) காதலியால் (ஆ) காதலனுக்கு
(இ) காதலன் அடிக்கடி தன் காதலியைச் சந்திப்பதற்கு அவளின் வீட்டுவழியாலே செல்வதுண்டு. வீட்டின் வேலிப்பக்கத்தால் அவனது முகத்தைக் கண்டால் காதலிக்கு மகிழ்ச்சி ஏற்படுவது இயற்கைதானே? ஆனால் சில நாள்களாய் அவன் அவள் வீட்டின் வழியாகச் செல்லவில்லை. காதலிக்கு அவனைக் காணாததால் ஏற்பட்ட வேதனையின் வெளிப்பாடே இந்தக் கவிதை.

iv. (அ) தாயாரால் (ஆ) இறந்துபோன மகனின் நினைவால் கவலையுற்று அவனை மனத்தில் நினைந்து அவனுக்குக் கூறுவதுபோலப் பாடியது. (இ) மகன் இறந்துவிட்டான். அவனின் பூத உடலும் எரிந்து சாம்பராய் விட்டது. அல்லது இன்னும் சில மணித்தியாலங்களில் அவனுடலுக்கு அந்தநிலை ஏற்படலாம். மகன் பிழைப்பான் என்ற நம்பிக்கையில் அவனுக்கு மருந்து அரைத்த அம்மியைப் பார்க்கும் பொழுது அவளின் வயிறு பற்றி எரிகின்றது. அந்தத் தாய்மையின் சோகமே மருந்தையும் மருந்தரைத்த அம்மியையும் நினைந்து கரைந்து போகின்றது.

v. (அ) வாணனால் (ஆ) சேனாதிபதிக்கு
(இ) பகையரசன் மீது படையெடுக்க வாணன் என்ற அரசன் தனது சேனாதிபதியை அழைக்கின்றான். சேனாதிபதி அரசனின் போருக்கான காரணத்தைக் கேட்டபொழுது வாணன் உரைத்த பதிலுரைகளில் இதுவும் ஒன்று. துவாரகை நகரத் தலைவன் "மோர், தயிர் அருந்திய இடையன்" என்று பழிப்பதும் அவனின் இழிந்த குணத்தினைப் 'போக்கிலி' என்ற பேச்சு வழக்குச் சொல்லால் வெளிப்படுத்துவதும், "அவனைப் பிடித்துச் சிறையிடுவேன்" எனச் சூளுரைப்பதும், அதற்குத் தன் சேனாதிபதியை "அருஞ்சமருக்கு நாளையே செல்வீர்" எனக் கட்டளை இடுவதும் வாணனது அந்நேரக் கோபத்தை நன்கு புலப்படுத்துகின்றன.

vi. (அ) அஹ்மதுசாவால் (ஆ) மகனாகிய அப்பாசுக்கு
(இ) மன்னர் மன்னனாகிய அஹமதுசா ஒரு சமயம் வயிற்றுவலியால் அவதியுற்றார். இதனால் அவர் மிகவும் கவலையுற்று மந்திரி மூலமாக வைத்தியனை (பண்டிதன்) அழைப்பித்தார். வைத்தியனுக்கு அகமதுசாவின் நோய் என்ன என்று அறிந்து கொள்ளக் கூடவில்லை. எனவே அவ்வியாதியைப் போக்கல் இயலாது என்ற முடிவிற்கு வந்து அவருக்குக் குடிவகையை அருந்துமாறு பரிந்துரைத்தான். இச் செய்தியை அஹ்மதுசா தமது மகன் அப்பாசுக்கு உரைக்க மகன் அவ்வாறு குடிப்பது தகாது என்று மறுத்துரைத்தார். நோயின் கொடுமையைத் தாங்க முடியாது வருந்திய அஹ்மதுசா தன் மகனுக்கு அவ்வேளையிலே கூறிய கூற்றே இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vii. (அ) வெள்ளையம்மாவால் (ஆ) போரில் இறந்த தன் கணவனை பாதர் வெள்ளையின் உடலைக் கண்டு அதன் மீது விழுந்து அழுத சந்தர்ப்பத்தில் (இ) காலன் துரை படையெடுத்து ஊமைத்துரையைப் பிடிக்க வருகிறான் என அறிந்த கட்ட பொம்மு மிகுந்த கோபம் கொண்டான். அவன் கண்கள் சிவந்தன. தன் தம்பிமாரான ஊமைத்துரை, பாதர் வெள்ளை ஆகியோரை நோக்கி, "ஐந்நூறு பட்டாளம் வந்தாலும் அத்தனை பேர்களதும் தலையை அறுப்பேன்" என்று வஞ்சினம் புகன்றான்; பின் தன் தம்பிமார் துணைவரக் காலன் துரையை எதிர்த்துப் படை நடத்திச் சென்றான். இருபகுதியாருக்குமிடையே கடும்போர் நிகழ்ந்தது. போரில் வீரம் விளைத்து வீர மரணத்தைத் தழுவினான் பாதர் வெள்ளை, தலையன்மார் அவன் பிரிவை நினைந்து ஆறாகக் கண்ணீர் பெருக்கிய வேளையிலே, செய்தி அறிந்து வந்த வெள்ளையம்மா கணவனின் உடலில் விழுந்து அழுகையில் கூறியவையே இவை;

viii. (அ) சைத்தூனால் (ஆ) முகமதனீபுக்கும் அவருடன் சென்ற அபூபக்கர்சித்திக்கின் மக்கள் இருவர் உமறுக்கத்தாப்பின் மக்கள் இருவர் ஆகிய நால்வருக்கும்.

(இ) உமறுகத்தாப் என்ற இஸ்லாமிய மன்னர் ஆட்சிக் காலத்தில் முகமது அனீபாவும் உமறு கத்தாப்பின் மக்கள் இருவரும் அபூபக்கர் சித்திக்கின் மக்கள் இருவருமாக ஐவரும் காட்டுக்கு வேட்டையாடச் சென்றனர். மதீனு நகர் நீங்கிக் குதிரைகளிலே காற்றாய்ப் பறந்து காட்டை அடைந்தனர். அந்தக்காட்டின் உரிமையாளியான சைத்தூன் என்ற வீரப் பெண்மணி தனது காட்டினுள்ளே உத்தரவு பெறாது நுழைந்த அவர்களை நோக்கிக் கோபத்துடன் கூறிய வார்த்தைகளே இவை.

## 2.

நாட்டார் பாடல்களின் தனிச் சிறப்பிற்குக் காரணம் அவை இசையோடு பாட ஏற்ற வகையில் அமைந்துள்ளமையே. இந்த இசையினினிமையை நன்கு நயந்தவர் பாரதியார் அவர் தமது குயிற் பாட்டிலே தமது உணர்ச்சி அநுபவத்தைக் குயிலின் கூற்றாகப் பின் வருமாறு எடுத்துரைத்துள்ளார்;

"ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும் நெல்லிடிக்கும்
கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணம் இடிப்பார்தம் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்
நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை எவரையும் கவரும் இயல்பினது; படிப்பறிவு குறைந்தவர்களுக்கோ பாடற் கருத்துக்களிலும் அவை வழங்கும் இசையின்பமே கூடிய கவர்ச்சி தருவதாகும். கப்பற்பாட்டுக்களில் வரும் 'ஏலேலோ ஐலசா' போன்றவை ஓசையும் இசையின்பமும் பொருந்தி உள்ளத்தைத் தம் வசமாக்கி விடுகின்றன. கும்மிப் பாடல்களின் ஒத்திசை, கோலாட்டப் பாட்டுகளின் தருக்கள், வசந்தன் பாடல் தருக்கள் என்பன கூட்டாகப் பாடுகையிலே கேட்போரின் உள்ளங்களைப் பரவசம் ஆக்கும் என்பது திண்ணம்.

கவடியடிக்கக் கவடியடிக்கக்
கைகால் முறியக் கைகால் முறியக்
காலுக்கு மருந்து தேடிக்கட்டு தேடிக்கட்டு

என்ற கிட்டியடித்தற் பாடலிலே விளையாட்டுக் கேற்ற சந்தமும் அதனால் உண்டாகும் இசையின்பமும் உள்ளத்தைப் பெரிதும் ஈர்க்க வல்லனவாகும். தாலாட்டுப் பாடல் காதற்பாடல், ஒப்பாரி என்பன நெகிழ்ந்த இசையோடு கூடி அவ்வவற்றிற்கு உரிய உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்யவல்லன.

ஒருதட்டு - ஏலேலோ
மண்ணெடுத்து ஐலசா
நான்போட்ட - ஏலேலோ
ரயிலுரோட்டு - ஐலசா

என்ற பாடலிலே கூட்டாக எழும் இசையானது பொருளுணர்வையும் விஞ்சி நின்று இன்பம் பயக்கின்றது. கதைப் பாடல்களிலும் நாட்டுக் கூத்துக்களிலும் மெய்ப்பாடுகளுக்கு ஏற்ற இசையின்பம் குறிப்பிடத் தக்கதாகும்.

"தூக்குறு மோர்தயிர் நோக்கி அருந்திய
துவரை நகர்க் கிறையாம்
போக்கிலி என்னுடன் தாக்கிட வெஞ்சமர்
புரியப் போனும்
வீக்கி அவன்தனை ஏக்க முறும்படி
வெஞ்சிறை செய்திடுவேன்"

என்ற பாணபன்னனின் கூற்றிலே ஏளனம், கோபம் ஆகிய மெய்ப்பாடுகள் இசையூடாக அழகான முறையில் வெளிப்படுகின்றன;

வையாளி போடுதாம் முத்துவர்ணம்
வாரி எறியுதாம் பேய்க்குதிரை
சில்லரைக் காடு செடிக்காடு
சிட்டாய்ப் பறக்குதாம் பேய்க்குதிரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கட்டபொம்மு கதைப் பாடலில் குதிரை செல்லும் ஓசையின் இசையின்பத்தை நுகரலாம். இவ்வாறு நாட்டார் பாடல்கள் எங்கும் இசையும் இனிமையும் இணைந்துள்ளன.

**3.**

இலக்கியம் வாழ்க்கையிலிருந்து தோன்றி அதற்கு விளக்கம் தந்து அதனை மேன்மைப்படுத்துகின்றது. நாட்டார் பாடல்கள் மக்களின் வாழ்விலிருந்தே மலர்ந்து வாழ்வின் சிறப்பமிசங்களைப் புலப்படுத்தி வாழ்வை உயர்த்துவதால் அவை இலக்கியம் என்ற சொல்லுக்குச் சாலவும் பொருந்தியன. வாழ்க்கையை அறிவு நிலையில் நின்று நோக்காமல் உணர்வு நிலையிலேயே அவை நோக்குவதால் அவற்றைப் படிக்கையில் வாழ்வின் இன்பங்களும் அழகுகளும் நன்கு புலனாகின்றன. நகை, அழுகை, அருவருப்பு, அச்சம், வியப்பு, கோபம் முதலான சுவைகள் நாட்டார் பாடல்களில் உள்ளது உள்ளவாறே வெளிப்படுத்தப்படுகின்றன. சுயநலமின்றி உலகம் யாவும் வாழவேண்டும் என்ற பெருவிருப்பை நாட்டார் பாடல்கள் ஆங்காங்கே புலப்படுத்துகின்றன. இவற்றால் இப்பாடல்கள் எமது விருப்பத்திற்கும் மதிப்பிற்கும் உரியன வாகின்றன.

'மனம் திருந்தில் இனம் திருந்தும்' என்பது பழமொழி. கள்ளங் கபடறியாத நாட்டுப்புற மக்களின் மனங்கள் தூய்மையானவை. பிறரின் நல்வாழ்வு கண்டு பொறாமையோ அசூயையோ இவர்கள் கொள்வதில்லை.

அயலும் புடையும் வாழ வேண்டும்
அன்னமும் சுற்றமும் வாழ வேண்டும்
ஆச்சியும் அப்புவும் வாழ வேண்டும்
அம்மானும் மாமியும் வாழ வேண்டும்

எனவும்,

பட்டி பெருக வேணும் — தம்பிரானே
பாற்பானை பொங்க வேணும் — தம்பிரானே

எனவும் கிராமத்தார் விரும்பும் விருப்பத்திலே 'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்' என்ற சம்பந்தரின் உயர் குறிக்கோளையும் 'வான்முகில் வழாது பெய்க' என்ற கச்சியப்பரின் பேராவலையும் காண்கின்றோம்.

தொட்டில் தொடக்கம் சுடுகாடுவரை மக்களின் வாழ்க்கையின் பல நிலைகளையும் நாட்டார் பாடல்கள் அழகாகச் சித்திரிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டனூர் எல்லையிலே — என்னையா
பட்டுவந்து விற்குதென்று
பட்டு விலைமதிச்சு — என்னையா
பத்துப்பேர் தாதியராம்
பத்துப்பேர் தாதியர்க்கு—என்கண்ணே
பாங்காக நீயொருத்தன்

என்ற தாலாட்டுப் பாடலிலே தாயொருத்தியின் இன்பக் கனவு விரிகின்ற அழகினை நாம் அநுபவிக்கலாம். தொட்டிலிலே, ஏணையிலே தூங்கும் பிள்ளைதான் அது. ஆனால் தாய்க்கோ அவன் செல்வச் சீமான்! ''காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு'' அல்லவா?

காதலிலே கனிந்துபோன தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் காணவும், உரையாடவும் கூடி மகிழவும் விரும்புதல் இயற்கையே: அதற்கு வாய்ப்புக் கிட்டாத போது அவர்கள் அடையும் ஏக்கம் சொற்களால் விளக்கும் தன்மையதன்று. நாட்டார் பாடல்களிலே இத்தகைய காதல் உணர்வுகள் உள்ளத்தைத் தொடும் வகையிலே சித்திரிக்கப்படுகின்றன.

'ஆதங்காக்கா ஆதங்காக்கா அவரைக் கண்டாற் சொல்லிடுங்க
பூவரசங் கன்னியொன்று பூமலர்ந்து வாடுதென்று'

நகைச்சுவையும் நாட்டார் பாடல்களிலே நல்லிடம் பெறுகின்றது:

ஏண்டி குட்டி என்னடி குட்டி என்னடி செய்தாய்
அம்மியடியில் கும்மி அடித்தேன் சும்மாவா இருந்தேன்.

இவ்வாறே ஒப்பாரியிற் சோகமும், தொழிலாளர் பாட்டுக்களிலே நம்பிக்கை, ஏக்கம் முதலான கலப்புணர்வுகளும், வசந்தன் பாட்டுக்களிலே பத்தியுணர்வும், முதலாகப் பல்வேறு மெய்ப்பாடுகளும் மேலோங்கிப் படிப்போர் உள்ளங்களைக் கவர்வனவாய் அமைந்துள்ளன.

## 4

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்பது பழமொழி. குழந்தைகளை விரும்பாதவர் எவரும் இல்லை. அதிலும் தாயானவள் தான் பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்த பிள்ளையிலே கொள்ளும் பாசமும் பரிவும் ஈடுஇணையற்றவை. அதன் பெருமதியை அவளே அறிவாள். முத்தாக, பவளமாக, முதுகடலின் ஆணி முத்தாக எல்லாம் குழந்தை அவளுக்கு விளங்குவதில் வியப்பில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தே பவளமே — என்
முக்கனியே சர்க்கரையே
கொத்து மருக்கொழுந்தே —
கோமளமே கண்வளராய்

என்றும்

கரும்பே கலகலங்கக்
கல்லாறு தண்ணீவரக்
கல்லாற்றுத் தண்ணியிலே
நெல்லா விளைஞ்ச முத்து

என்றும் அவள் பாடுவது அவளைப் பொறுத்தவரையில் வெறும் கற்பனை அல்ல; முற்ற முழுக்க உண்மையேயாகும், அத்தகைய பெரிய மதிப்பை அக்குழந்தைக்கு அவள் அளிப்பதற்குக் காரணமும் உண்டு.

மலடி மலடியென்று மாநிலத்தோர் ஏசாமல்
மலடிக் கொரு குழந்தை மாயவனுர் தந்த பிச்சை

என்ருல் அதன் பெருமையும் மகிமையும் இவ்வளவு என்று கூறத் தான் முடியுமா?

தனது இரத்தத்தில் இரத்தமாகத் தசையில் தசையாகத்தானே மறுபிறப்பு எடுத்ததுபோல விளங்கும் குழந்தையிலே அவளின் பாசத்திற்கு எல்லை காண்பது அரிதுதான்.

வெள்ளிக் கிழமை விரத மகத்துவத்தால்
பிள்ளைக் கலிதீர்க்கப் பிறந்த நவரசமோ?

என்று உள்ளம் உருக விளித்தொடுக்கும் தாய்,

கட்டிப் பசும்பொன்னே — என்
கண்மணியே.........

எனப் பாசத்தால் பரிந்தழைக்கின்றமை எமது நெஞ்சங்களையும் தொடுகின்றது:

குழந்தையை மையமாக வைத்துத் தாய் கட்டி எழுப்புகின்ற ஆசைக் கனவுகள் கணக்கில்லாதவை;

முதிதாக நீயொருத்தன்
முத்தெடுப்பார் உங்கள் அப்பன்
முடிச்சவிழ்ப்பான் உன்மாமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அவள் தன் கணவன், சகோதரன் முதலியோரைச் செல்வப் பிரபுக்களாய்க் கற்பனை செய்வதும் அவளின் ஆசைக் கனவின் வெளிப் பாடேயாகும். உற்றார் உறவினர் எல்லாம் தன் குழந்தைக்குப் பணி செய்து, சன்மானம் அளித்து, அன்பு பூண்டு விளங்குவதாய் அவள் பெருமிதங் கொள்வதும் சுவை பயப்பதேயாகும்.

## 5.

மரணம், சமயவாதிகளாலே இயற்கையானது, தவிர்க்க முடியாதது, ஏற்றுக் கொள்ள வேண்டியது என்று வற்புறுத்திக் கூறப்படுவது உண்மையே. ஆனால் சாதாரண மனிதர் மரணத்தை வரவேற்க எப்பொழுதும் தயங்குகின்றனர். அதுவும் தமக்கு மிக நெருங்கியவர், பாசத்திற்கு உரியவர் இறப்பதை அவர்களால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை. அந்தச் சந்தர்ப்பங்களில் அவர்கள் அழுது கதறுவதும் ஒப்பாரி வைப்பதும் இயல்பே. அவர்களின் பிரிவுக் கவலை அவர்களைச் சார்ந்தவர்களையும் தொற்று நோயாய்ப் பற்றிக்கொள்கின்றது.

இத்தகைய சோகச் சூழ்நிலையை நிலையாய் வாழ வைப்பனவாய் நாட்டார்களின் ஒப்பாரிப் பாடல்கள் விளங்குகின்றன. தாயொருத்தி தன் மகனை இழந்துவிடுகின்றாள். இறப்பிற்கு முன்பு அவள் பிள்ளையைக் காக்க எடுத்த முயற்சிகள் மிகப்பல. இறுதிவரை அவன் சாக மாட்டான் என்றே நம்பியிருந்தவள் அவள். பரிகாரியின் உறுதி வார்த்தைகள் அவன் கூறிய மருந்துகளைப் பெற அவள் பட்டபாடுகள் யாவற்றையும் விஞ்சிக்கொண்டு மகன் இறந்து போனதை அவளால் தாங்கிக் கொள்ளக் கூடவில்லை. அந்தத்தாயுள்ளம், மகனது அழகுமேனி, அவனுக்காக அரைத்த மருந்து, மருந்து அரைத்த அம்மி ஆகியவற்றையெல்லாம் நினைத்து நினைத்து இரத்தக் கண்ணீர் வடிக்கின்றது.

அரைத்த மருந்தோ இங்கே
அம்மிபாழ் போகுதெணை
உரைத்த மருந்தோ
உருக்குலைந்து போகுதெணை

என்று அவள் புலம்புவது எம் உள்ளங்களைத் தொடுகின்றது. இது போலவே மனைவி கணவனை இழந்து புலம்புவதும் உருக்கத்தை மிகுவிப்பதாய் உள்ளது. அவனது பெருமைகள், அவனோடு சேர்ந்து வாழ்ந்து தான்பெற்ற இன்பங்கள், அவன் கட்டிய மாங்கல்யத்தின் மகத்துவம் என்ற எல்லாம் ஒரு நொடியில் மின்னலாய் மறைந்து போகின்றன. இந்நிலையில் அவன் இருக்கும் மறு உலகத்தில் தனக்கும் ஓர் இடம் தேடிவைக்கும்படி அவள் கூறுவது இயல்புதானே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரைக் குறித்து வையும் — எனக்கு
உற்றமனை தேடிவையும்
நாட்டைக் குறித்து வையும் — எனக்கு
நல்லமனை தேடிவையும்

என்ற பாடல் அவளின் சோகத்தின் உச்சத்தினைப் புலப்படுத்துவதாய் உள்ளது.

இழப்பினால் ஏற்படும் சோகந் தவிரக் காதலர்கள், தம் விருப்பம் நிறைவேறாது தனித்திருந்து ஏங்கும் நிலையிலும், தொழிலாளர் தமது தொழில்களின் கடினங்களின் போதும், வறுமையின் வாட்டலிலும் வருந்தும் வருத்தங்களும் நாட்டார் பாடல்களில் சிறப்பாகச் சித்திரிக்கப்படுகின்றன.

சோகத்திற்கு எதிரான நகைச் சுவையினைப் புலப்படுத்தும் வேடிக்கைப் பாடல்களுக்கும் நாட்டார் இலக்கியத்தில் குறைவில்லை. இவற்றிலே நையாண்டி குத்தல்களைக் காண்பது அரிது. கள்ளமற்ற குழந்தை உள்ளம் வாய்ந்த கிராமத்தவரின் வியப்பு, புதுமை, வேடிக்கைப் போக்குகளே நாட்டார் பாடல்களில் நகைச் சுவைக்கு வாயில்களாய் உள்ளன.

எட்டு நாளாய்ச் செத்துக்கிடந்த சாரைப் பாம்பைச்
— சந்தமாமா
எட்டி நிண்டு தொட்டுப் போட்டேன் சந்தமாமா

என்ற பாடலில் கிராமப் புறத்தானின் பயந்த சுபாவம் நகைப்பினை ஏற்படுத்துகின்றது.

சிங்கிலி நோனா சிங்கிலி நோனா
சிரிப்புக் கொண்டைக்காரி
பார்த்த பேர்கள் ஆசைப்படும்
பத்துக் கொண்டைக்காரி

என்ற பாடலில் இரசனை உணர்வால் விளைந்த நகைச்சுவை தாளலயத்தோடு கூடிப் பாடிக் களிப்படைய உதவுவதாய் அமைந்துள்ளது. இவ்வாறே பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நகைச்சுவை ஏற்படுத்த வல்ல பல பாடல்களை நாம் நாட்டார் இலக்கியத்தில் படித்து நயக்கலாம்.

6.

தொழிலாளர்கள் உடலாலே கடினமாக உழைப்பவர்கள்; வெயில், மழை என்ற வேறுபாடுகளையும் பொருட்படுத்தாது பாடுபடுபவர்கள். அவர்கள் தமது தொழிலிலே உண்டாகும் களைப்பு, அலுப்பு என்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றைப் போக்குவதற்குப் பாட்டையே தஞ்சம் அடைகின்றனர். இவர்களின் பாடல்கள் பெரும்பாலும் கூட்டாகவே சேர்ந்து பாடப் படுவன. எனவே இப் பாட்டுக்களிலே சில சொற்றொடர்கள் மீண்டும் மீண்டும் பாடப்படும் இயல்பும் காணப்படுகின்றது. 'ஏலேலோ ஐலசா' 'ஏலேலக்குயிலே,' 'வருமாப்போல்' முதலிய சொற்றொடர்களை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். சிலவேளைகளிலே அவர்கள் தனித்தும் பாடி மகிழ்வதுமுண்டு. ஏற்றம் இறைத்தல் ஏருழுதல், வீதி சமைத்தல் முதலிய தொழில்கள் நிகழும் பொழுது தனிப்பாடல்கள் பிறத்தல் கூடும்.

பட்டி பெருக வேணும் தம்பிரானே
பாற்பானை பொங்க வேணும் தம்பிரானே
மேழி பெருக வேணும் தம்பிரானே
வேளாண்மை விளைய வேணும் தம்பிரானே.

என்ற பாடல் ஏர் பூட்டும்போது பாடப்படுவதாகும். இந்தப் பாடல் உழவனின் நல்லுள்ளத்தைப் புலப்படுத்துகின்றது. அவனது நல்ல ஆசையையும் எதிர்பார்ப்பையும் வெளிப்படுத்துகின்றது. இறை நம்பிக்கை மிகுந்தவன் அவன் என்பதையும் இதனால் அறிந்து கொள்கிறோம்.

உழவிற்கு உதவும் எருதுகள் உழவனைப் பொறுத்தவரையில் வெறும் விலங்குகள் அல்ல. அவை அவனுக்குப் பெற்ற பிள்ளைக்குச் சமம். ஏர் பூட்டி உழுகையிலே எருதுகளுக்கு உற்சாகம் அளிக்கும் வகையிலே அவற்றை அழைத்து அவற்றோடு உரையாடுவதுபோல அவன் பாடுவான்.

ஆழியிலே போய் முழுகி — செல்லாநீ
அண்டிவந்த தீரனடா.

என்ற வகையில் அவன் தனது எருதைத் தட்டிக்கொடுப்பது அவனது நன்றியும் அன்பும் கலந்த உள்ளத்தைப் புலப்படுத்துகின்றது.

மீன்பிடிகாரர்களின் வாழ்க்கை எக்காலத்திலும் அவலம் நிறைந்ததே. எனினும் அவர்கள் சோர்ந்து இருந்து விடுவதில்லை. ஒவ்வொரு நாளும் புதிய நம்பிக்கையோடு,

கடல் கடந்து மீன்பிடிப்போமே - வீண்
கவலையற்று வாழ்ந்திடுவோமே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாடிக் கொண்டுதான் அவர்கள் புறப்படுகின்றனர். ஆனால் அவ்வேளையிலே இறந்தகாலக் கவலை வாழ்வையும் அவர்கள் நினைக்காமல் இருப்பதில்லை:

முப்பதுநாள் உழைத்துழைத்து நிறையப்பணம் வாங்கி
அதை மூன்றுநாளில் தின்றுவிட்டுக் கடனையும் வாங்கி
பாக்கிநாளில் பெரும் பகுதியைப் பட்டினி யாக்கி — மனப்
பதறலோடு மாரடிக்கும் சன்மமும் வேண்டாம்

என்ற பாடலடிகள் மனத்தை உருக்குவனவாய் உள்ளன.

நாடுவிட்டு நாடு சென்று வாழ்வைத் துன்பக் கேணியாக்கி எப்பொழுதும் வருந்திக் கொண்டிருப்பவர்கள் தேயிலைத் தோட்டத் தொழிலாளர், கங்காணிமாரின் கெடுபிடிக்கு மத்தியில் ஏழைப் பெண்கள் மலையேறி இடுப்பொடியத் தேயிலைக் கொழுந்து கொய்கின்றனர். அவர்களின் பாடல்களிலே உற்சாகம் எங்கிருந்து வரும் ?

ஊரான ஊர் இழந்தேன் ஒத்தப்பனைத் தோப்பிழந்தேன்
பாரான கண்டியிலே பெத்ததாயும் வீடிழந்தேன்

என்று பாடுகையில் அப்பாடலிலே அவலச்சுவை மிக்கு விளங்குவது இயல்பே.

இவ்வாறு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மன உணர்வுகளைப் புலப்படுத்துவனவாகத் தொழிலாளர் பாடல்கள் விளங்குகின்றன என்றும் சொல்லவியலாது. தாம் செய்யும் செயலைச் சிறு சொற்களால் வெளிப்படுத்தி அதை இசையோடு பாடிக் களைப்பை மறப்பதும் அவர்களின் இயற்கை.

ஒரு தட்டு — ஏலேலோ
மண்ணெடுத்து — ஐலசா
நான் போட்ட — ஏலேலோ
ரயிலு ரோட்டு — ஐலசா

என்ற வகையிலும் பாடல்கள் அமைவதுண்டு. சுருங்கச் சொன்னால் நாட்டார் பாடல்கள் வரிசையில் தொழிலாளர்கள் பாடல்கள் கணிசமான இடத்தை வகிக்கின்றன எனலாம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ். போன்: 24175 - 24211

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org